Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36
கதிர் : 095
திங்கட்கிழமை
மாசி 17 ஆம் நாள்
01 மார்ச் 2021
வள்ளுவர் ஆண்டு 2051
பக்கங்கள்: 20
விலை : ரூ.30
செய்தி : 021 493 0000
விளம்பரம்: 021 493 1111

## சா/தர பரீட்சை இன்று ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 1
க.பொ.த சாதாரண தரப் பரீட்சை இன்று ஆரம்பமாக வுள்ளது. அதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய் யப்பட்டுள்ளன என்று பரீட்சை 19

# இலங்கையில் தேர்தல்கள் இப்போதைக்கு நடக்காது



### அடித்துக் கூறுகிறது அரசாங்கம்

கொழும்பு, மார்ச் 1
இலங்கை இன்னமும் கொரோனா வைரஸின் தாக்கத்தை எதிர்கொண்டு வருகின்றது. அதனால் நாட்டில் இப் போதைக்கு தேர்தல் எதையும் நடத்தும் உத்தேசம் அரசுக்கு அறவே இல்லை. இவ்வாறு மின்சாரத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார். 19

## தனியார் மருத்துவமனை பணியாளருக்குத் தொற்று!

யாழ்ப்பாணம், மார்ச் 1
வடமராட்சி, நெல்லியடியில் உள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் பணியாற்றும் ஆய்வு கூடத் தொழில்நுட்பவியலாளர் ஒருவருக்கு, கொரோனாத் தொற்று 19

## கொடிகாமத்தில் விரைவில் எழுமாற்றுச் சோதனைகள்

*தொற்றாளர்கள் நடமாடியதால் சுகாதாரப் பிரிவு அவசர நடவடிக்கை*

யாழ்ப்பாணம், மார்ச் 1
கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்கள் சிலர் கொடிகாமம் நகர்ப் பகுதியில் நட மாடியதை அடுத்து, அந்தப் பகுதி 19

## தொற்றுக்குள்ளான மாணவர்களுக்கு கோப்பாயில் பரீட்சை நிலையம்

அச்சுவேலி, மார்ச் 1
கொரோனாத் தொற்றுக்கு உள் ளாகிய யாழ்ப்பாணம் மாவட்ட பரீட்சார்த்திகள் மற்றும் தனிமைப் படுத்தப்பட்ட பரீட் சார்த்திகள் பரீட்சை 19

## முதலமைச்சர் வேட்பாளரை உரிய நேரம் அறிவிப்போம்!

### கூட்டமைப்பின் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 1
மாகாண சபைகளுக்கான தேர்தல் தொடர் பில் அரசு இன்னமும் உத்தியோகபூர்வ அறிவிப்பு எதையும் விடுக்கவில்லை. அத னால் வடக்கு, கிழக்கு மாகாண சபைகளுக்கான தமிழ்த் தேசி 19



## துருவங்களின் சந்திப்பு கொழும்பில் பரபரப்பு!

கொழும்பு, மார்ச் 1
முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜ பக்சவுக்கும் இடையில் திடீர் சந் 19




## சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்துங்கள் இலங்கையை!

*வலியுறுத்தி நல்லூரில் உணவு தவிர்ப்பு*

யாழ்ப்பாணம், மார்ச் 1
இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதி மன் றில் நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்தி நல்லூர் ஆலயப் 19

## 7 வயதுச் சிறுவன் அடித்துக் கொலை!

### மூளையில் குருதிக் கசிவு ஏற்பட்டதால் சாவு என அறிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 1
அடிகாயங்களுடன் மருத்துவமனையில் சேர்க் கப்பட்டு, சிகிச்சை பெற்றுவந்த 7 வயதுச் சிறுவன் ஒருவன் சிகிச்சை 07

## ஜெனிவாவை நம்பும் நிலை அரசாலேயே உருவாகியது!

### ஜே.வி.பி. கூறுகின்றது

கொழும்பு, மார்ச் 1
ஜெனிவா ஊடாகவே நாட்டில் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும் என்று இலங்கை மக்கள் எண்ணும் நிலைமையை அரசு உருவாக்கியுள்ளது. இதனால் மக்களுக்கு அரசின் மீதும், அரச நிறுவனங்கள் மீதும் நம்பிக்கை இல்லாது போயுள்ளது. இவ்வாறு ஜே.வி.பியின் தலைவரும் 07



யாழ்ப்பாணம் நகரத்தின் மத்தியில், நவீன சந்தைக் கட்டடத் தொகுதியை ஊடறுத்துச் செல்லும் கழிவு நீர் வாய்க்கால் நேற்றிரவு யாழ்ப்பாணம் மாநகர சபையால் சுத்திகரிக்கப்பட்டது. இந்தக் கால்வாய் 20 ஆண்டு களுக்கு மேலாக சுத்திகரிக்கப்படவில்லை. கால்வாய் மீது கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. ஆபத்தான சுத்திகரிப்புப் பணியில் சபையின் ஊழியர்கள் ஈடுபட்டிருக்கின்றனர் என்று யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வர் வி.மணி வண்ணன் தெரிவித்தார். (ஏ-319)

## குழு மோதல்; அறுவர் காயம்

வவுனியா, மார்ச் 1
வவுனியாவில் இரு குழுக்களுக்கு இடையே நடந்த மோதலில் ஆறு பேர் காயமடைந்துள்ளனர். இந் தச் சம்பவம் நேற்று அதிகாலை சிதம்பரபுரம், மதுராநகர் பகுதி யில் நடந்துள்ளது. அங்கு நடந்த மரண வீடு ஒன்றுக் குக்குச் சென்ற ஆச்சி 07

## வயோதிபரின் காணியை பறித்த தொல்பொருள் திணைக்களம்!

### தண்ணிமுறிப்பில் அடாவடி



முல்லைத்தீவு, மார்ச் 1
முல்லைத்தீவு, தண்ணி முறிப்பு கிராமத்தில் போர்ச் சூழல் காரணமாக கைவிடப் பட்ட தனது காணியைத் துப்புரவு செய்து எல்லை யிட்டு, விவசாய நடவடிக்கைக் 07

# மாத இறுதிக்குள் சட்டத் திருத்தம் ஜூனில் மாகாணத் தேர்தல் சாத்தியம்

## தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிப்பு

**கொழும்பு, மார்ச் 1**
**மாகாண சபைகளுக்கான தேர்தலை ஜூன் மாதமளவில் நடத்துவதாக இருந்தால், இந்த மாத இறுதிக்குள் கட்டாயம் சட்டத் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர் எம். எம்.மொஹமட் 'உதயனிடம்' தெரிவித்தார்.**

அவ்வாறு சட்டத் திருத்தம் மேற்கொள்ளப்பட்ட பிறகே தேர்தல் திகதியை நிர்ணயிக்க முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

வடக்கு உட்பட 9 மாகாண சபைகளுக்கான தேர்தலை எதிர்வரும் ஜூன் மாதம் நடத்துவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது எனவும், இவ் விவகாரம் தொடர்பில் நாளைமறுதினம் புதன்கிழமை மாகாண சபைகளின் முன்னாள் உறுப்பினர்களுடன் ஜனாதிபதி கோத்தாபய பேச்சு நடத்தவுள்ளார் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் எம். எம்.மொஹமட் தெரிவித்ததாவது:

இவ்விடயம் குறித்து எம்மால் தற்போது ஒரு விடயத்தை மாத்திரமே குறிப்பிட முடியும். பழைய முறையிலோ அல்லது புதிய முறைமையின் கீழோ தேர்தலை நடத்துவதாக இருந்தால் சட்டத் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும். ஜூன் மாதம் தேர்தலை நடத்துவதாக இருந்தால் இப்போதே (மார்ச் மாதத்துக்குள்) அதனைச் செய்ய வேண்டும். ஜூன் மாதம் நெருங்கும் வேளை சட்டத் திருத்தம் செய்யப்பட்டால் தேர்தலை நடத்துவதற்கு எப்படியும் 3 மாதங்கள்வரை எடுக்கும் - என்றார். (ஒ.ப,5,44)

# தமிழ்த் தேசியப் பேரவை: கூட்டமைப்பாக முடிவெடுப்போம்

## புளொட் அமைப்பின் தலைவர் சித்தார்த்தன் கூறுகின்றார்



யாழ்ப்பாணம், மார்ச் 1
**தமிழ்த் தேசியப் பேரவையில் இணைவது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூன்று பங்காளிக் கட்சிகளும் கூடி ஆராய்ந்தே முடிவெடுக்க முடியும்.**

இவ்வாறு புளொட் அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய த.சித்தார்த்தன் தெரிவித்தார்.

'இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி பேரவையில் இணைவதில்லை என்ற முடிவை எடுத்துள்ளது. இந்தச் சூழலில் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றாக இருக்கும் நாம் அதற்கு முரணான முடிவை எடுப்பது, கூட்டமைப்புக்குள் குழப்பத்தை ஏற்படுத்தும்.

இந்தவிடயம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூன்று பங்காளிக் கட்சிகளும் கூடி ஆராய்ந்து முடிவெடுக்கும்' என்றார் சித்தார்த்தன். (ஒ.5)

# வெலிக்கடையில் 11 தொலைபேசிகள் மீட்பு

கொழும்பு, மார்ச் 1
வெலிக்கடைச் சிறைச்சாலையில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போது, தொலைபேசிகள் உள்ளிட்ட பல பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

இதற்கமைய, 11 தொலைபேசிகள், 4 சிம் அட்டைகள், 8 பற்றிகள் மற்றும் 6 சார்ஜர்கள் ஆகியவை இதன்போது கைப்பற்றப்பட்டுள்ளன என்று சிறைச்சாலைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (ற-இ)

# தனி ஆவர்த்தனம் வாசிக்க நினைக்கும் தமிழ் அரசுவை வலிந்து அழைக்கோம்

## சூடு வைக்கிறார் சிறீகாந்தா

யாழ்ப்பாணம், மார்ச் 1
**தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமை முயற்சி யென்பது தேர்தல் கூட்டணியல்ல. ஆனால், வெறுமனே கூடிக்கலையும் கூட்டங்களையும் நடத்தத் தயாரில்லை. ஒரு முறையான கட்டமைப்பு அவசியம். புதிய கூட்டணியில் இணையும்படி இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியிடம் வற்புறுத்தமாட்டோம்.**

இவ்வாறு தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவரும் மூத்த சட்டத்தரணியுமான ந.சிறீகாந்தா தெரிவித்தார்.

தமிழ்க் கட்சிகள் கூட்டாக இணைந்து தேர்தலை சந்திக்கக் கூடாது, புதிய கூட்டணி உருவாக்கக்கூடாது என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சி தீர்மானித்துள்ளது. இது குறித்து கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்க் கட்சிகளின் ஒன்றிணைவது என்பது தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை வென்றெடுப்பதற்கான திட்டமிட்ட வேலைத்திட்டங்களை கொண்டிருக்க வேண்டும். எமது இலக்கு என்ன என்பதையும், அதை அடைவதற்கான வழிவகைகள் என்ன என்பதையும் தெரிந்திருக்க வேண்டும். நாம் சில்லறை அரசியல் வாதிகளாக செயற்படப் போகிறோமா?, அல்லது மக்களுக்கான அரசியல் செய்யப் போகிறோமா என்பதே கேள்வி.

மக்களின் அரசியல் பிரச்சினைகளைக் கையாள நிறுவனமயப்பட்ட அமைப்பொன்றே எமக்குத் தேவை. மக்களுக்கான அரசியலில் தேர்தல் பற்றிய பேச்சு அவசியமே தேவையில்லை. இந்த கூட்டுக்கு தமிழ் அரசுக் கட்சி தயாரில்லையென்றால் அவர்களை வற்புறுத்த மாட்டோம்- என்றார். (ஒ-26)

# மருத்துவரை உடன் நியமிக்குக பொக்கணை மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, மார்ச் 1
**முல்லைத்தீவு அம்பலவன் பொக்கணை ஆரம்ப சுகாதார நிலையத்துக்கு மருத்துவரை நியமிக்க வேண்டும். அல்லது நடமாடும் மருத்துவ சேவை வழங்கப்பட வேண்டும் என்று மாத்தளன், அம்பலவன்பொக்கணை மற்றும் வலைஞர்மடம் ஆகிய கிராமங்களின் மக்கள் முல்லைத்தீவு பிராந்திய சுகாதாரப் பணிப்பாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

இந்தக் கிராமங்களில் 450க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்றன. இந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தமது மருத்துவத் தேவைக்காக முல்லைத்தீவு பொது மருத்துவமனை, புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவமனை என்பவற்றுக்குச் செல்கின்றனர்.

இந்தக் கிராமங்களுக்கு 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் பஸ் சேவைகள் இடம் பெறுவதில்லை. போக்குவரத்து நெருக்கடியை இப்பகுதி மக்கள் சந்திக்கின்றனர்.

இந்த நிலையில் அம்பலவன் பொக்கணை ஆரம்ப சுகாதார நிலையத்துக்கு வைத்தியரை நியமியுங்கள் அல்லது மாத்தளன், அம்பலவன்பொக்கணை மற்றும் வலைஞர்மடம் ஆகிய கிராமங்களில் நடமாடும் வைத்திய சேவையை நடத்துங்கள் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-13)



# தடுப்பூசி செலுத்துவதை ஆராய விசேட குழுக்கள்

கொழும்பு,மார்ச் 1
கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் கொரோனாத் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை தொடர்பில் ஆராய்வதற்காக விசேட குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் ஆலோசனையின் பேரில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கிணங்க, தேசிய தொற்று நோயியல் பிரிவு அதிகாரிகள், பிராந்திய சுகாதார அதிகாரிகள் மற்றும் பொலிஸ் அதிகாரிகளை உள்ளடக்கிய குழுக்கள் இதற்காக நியமிக்கப்பட்டுள்ளன. (சு-இ)

# இன்று முதல் புதிய இடத்திலிருந்து வெளி மாவட்ட பேருந்து சேவை

## தனியார் பேருந்து சங்கம் முடிவு

யாழ்ப்பாணம், மார்ச் 1
வெளி மாவட்டங்களுக்கான தனியார் பேருந்து சேவைகள், இன்றுமுதல் புதிதாக திறக்கப்பட்ட பேருந்து நிலையத்திலிருந்து ஆரம்பிக்கப்படும் என்று வடக்கு மாகாண வீதிப் போக்குவரத்து அதிகாரசபையின் முகாமைத்துவசபை உறுப்பினரும், வடக்கு மாகாண தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத் தலைவருமான சி.சிவபரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

அண்மையில் புதிதாக திறக்கப்பட்ட தூர இடங்களுக்கான பேருந்து நிலையத்தில் பேருந்துகள் சேவையில் ஈடுபடுவது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் முக்கிய அதிகாரிகளுடன் நீண்ட நாள்களாக சந்திப்பு இடம்பெற்று வந்த நிலையில் வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் யாழ்ப்பாண மாநகர முதல்வர் ஆகியோர் விடுத்த கோரிக்கைக்கு இணங்க தனியார் போக்குவரத்துச் சங்க பேருந்துகள் இன்று காலையில் இருந்து புதிதாக திறக்கப்பட்ட பேருந்து நிலையத்திலிருந்து தமது சேவையைத் தொடர இருக்கின்றன. எனினும் அந்தச் சேவைக்கு இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்துகளும் எமக்கு ஒத்துழைப்பை வழங்க வேண்டும் அத்தோடு இ.போ.ச சாலை முகாமையாளர்கள் மற்றும் பிராந்திய முகாமையாளர் ஆகியோருக்கு வடக்கு மாகாண ஆளுநர், மாவட்டச் செயலர் மற்றும் யாழ்ப்பாண மாநகர முதல்வர் ஆகியோர் பூரண விளக்கமளித்து, இ.போ.ச பேருந்துகளையும் புதிதாக திறக்கப்பட்ட தூர இடங்களுக்கான பேருந்து நிலையத்திலிருந்து இணைந்து சேவையாற்றுவதற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு இணக்கப்பாட்டை ஏற்படுத்த முன்வரவேண்டும் - என்றார். (ப)



# சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கையை கட்டுப்படுத்துக

## கொக்குளாய் மீனவர்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, மார்ச். 1

கொக்குளாய் கடல்நீர் ஏரியில் இடம்பெறும் சட்ட விரோத கடற்றொழில் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துமாறு மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு கொக்குளாய் கடல்நீர் ஏரியில் புல்மோட்டை மீனவர்கள் தொடர்ச்சியாக சட்டவிரோத கடற்தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதுடன், சட்டத்துக்கு புறம்பான இயந்திரப் படகுகளையும் பயன்படுத்தி வருகின்றார்கள் என்று மீனவர்கள் தெரிவித்தனர்.

"சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடுபவர்களைக் கைது செய்ய கடந்த வாரத்தில் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தினர் மற்றும் சிறப்பு அதிரடிப்படையினர் குறித்த பகுதிக்குச் சென்றபோது இரண்டு படகுகளும் நூற்றுக்கு மேற்பட்ட தடைசெய்யப்பட்ட கூடுகளும் கைப்பற்றப்பட்டன. இதன்போது புல்மோட்டை மீனவர்கள் குழப்பத்தை ஏற்படுத்தினர். சிறப்பு அதிரடிப்படையினரே எம்மைக் காப்பாற்றி கடலில் இருந்து வெளியேற்றினர்" என்று முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரி ஒருவர் அமைச்சரிடம் தெரிவித்தார்.



# மன்னாரில் மீண்டும் டெங்குத் தாக்கம்



மன்னார், மார்ச். 1

மன்னாரில் டெங்கு காய்ச்சலுடன் சிறுமி ஒருவர் இனங் காணப்பட்டுள்ளார் என மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தெரிவித்தார். மன்னார் பேசாலைப் பகுதியைச் சேர்ந்த 14 வயதுடைய சிறுமி ஒருவர் காய்ச்சல் காரணமாக மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். அங்கு மேற்கொண்ட பரிசோதனையில் அவருக்கு டெங்குத் தொற்று உறுதியாகியுள்ளது. தற்போது அவர் மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார். சிறுமியின் வீடு மற்றும் மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையிலும் புகையூட்டல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. நீண்ட காலத்தின் பின்னர் மன்னார் மாவட்டத்தில் டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்ட ஒருவர் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளார் என அவர் மேலும் தெரிவித்தார்.

(வ-56)

# வட்டுவாகலில் ஒலிப்பவை ஆக்கிரமிப்பு உரைகளே!

## வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் ரவிகரன் விசனம்

முல்லைத்தீவு, மார்ச். 1

**சைவ இறை இசைப் பாடல்கள் மட்டுமே ஒலித்த வட்டுவாகல் கிராமத்தில் தற்போது பௌத்த மதக் காப்புரைகள் காலையும் மாலையும் என இரு வேளைகளும் ஆக்கிரமிப்பு உரைகளாக ஒலிக்கவிடப்படுகின்றன என்று முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது,

வட்டுவாகல் கிராமம் கடற்படை, இராணுவம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களம் எனப் பல்வேறு அரச திணைக்களங்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

வட்டுவாகல் ஒரு தனித் தமிழ் சைவக் கிராமமாகும். இந்த கிராமத்தில் தற்போது சத்தமில்லாத வகையில் பல வழிகளிலும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் மேலோங்கி வருகின்றன. அந்தவகையில் அங்கு கோத்தாபய கடற்படைத் தளம் என்னும் கடற்படைத்தளம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதனால் வட்டுவாகல் வடக்காறுப் பகுதி கடலுக்கு எவரும் மீன்பிடித் தொழிலுக்குச் செல்ல முடியாதவாறு கடற்படையினர் அபகரித்துள்ளனர்.

இதுதவிர வட்டுவாகல் வடக்காறுப் பக்கமாக கிட்டத்தட்ட நூற்றுக் கணக்கான ஏக்கர் நிலத்தை அபகரித்து அங்கு இராணுவமுகாம் அமைக்கப்பட்டதோடு அங்கு பெரிய விகாரையும், அமைக்கப்பட்டு ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் வலுப்பெற்று வருகின்றன.

அத்தோடு நந்திக்கடலும், நந்திக் கடலோடு சேர்ந்த வயல் நிலங்களையும் உள்ளடக்கி வனஜீவராசிகள் திணைக்களம் ஏறத்தாழ 10 ஆயிரத்து 250 ஏக்கர் நிலத்தை தங்களுடைய ஆளுகைக்குள் கொண்டுவந்துள்ளனர்.

இந்தவகையில் கடற்படை, இராணுவம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களம் என அரச இயந்திரங்கள் வட்டுவாகல் பகுதியில் தமது ஆக்கிரமிப்புச் செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளன.

அங்கு அமைக்கப்பட்டுள்ள விகாரையில் பௌத்த மத காப்புரைகள் காலையும் மாலையும் ஆக்கிரமிப்பு உரைகளாக ஒலிக்க விடப்படுகின்றன. நாளாந்தம் சைவ இறை இசைப் பாடல்கள் ஒலித்துவந்த வட்டுவாகல் கிராமத்தை தற்போது பௌத்த மதக் காப்புரைகள் ஆக்கிரமித்துள்ளன - என்றார்

(ற-246)

# தண்ணிமுறிப்பு குளத்தின் கீழ் சிறுபோகத்துக்கு 1,845 ஏக்கர்

முல்லைத்தீவு, மார்ச். 1

முல்லைத்தீவு. தண்ணிமுறிப்பு குளத்தின் கீழ் சிறுபோக நெற்செய்கைக்காக ஆயிரத்து 845 ஏக்கர் நிலத்துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு குமுழமுனை கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள தண்ணி முறிப்பு குளத்தின் கீழ் சிறுபோக நெற்செய்கைக்கான கூட்டம் கடந்த 24ம் திகதி புதன்கிழமை அளம்பில் பகுதியில் அமைந்துள்ள குமுழமுனை கமநலசேவை நிலையத்தில் நடைபெற்றது. முத்தையன்கட்டு நீர்ப்பாசன பொறியியலாளர் இ.இராகுலன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர், விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர், கிரமாசேவகர்கள் மற்றும் விவசாயிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்படி ஒன்று தொடக்கம் ஆறாம் கட்டங்கள் மற்றும் 11ஆம், 12ஆம் கட்டங்கள் உள்ளடங்கலாக ஆயிரத்து 845 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோகம் விதைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 15 ஆம் திகதி தொடக்கம் ஏப்ரல் மாதம் 10ஆம் திகதி வரை விதைப்புக் காலமாகவும், விதைக்கப்படவுள்ள நெல்லினம் 3.5 மாத நெல்லினம் என்றும், நீர்வழங்கும் திகதி எதிர்வரும் 15 ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் ஜீலை 20 ஆம் திகதி வரையும், கால்நடைகளை உரிமையாளர்கள் பராமரிக்கும் காலம் 15 ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் ஜீலை 30 ஆம் திகதி வரையும் என்றும், வேலி அடைக்கும் கடைசித் திகதி எதிர்வரும் 10 ஆம் திகதி என்றும், வேலி பிரிக்கும் கடைசித் திகதி எதிர்வரும் ஜீலை 31 ஆம் திகதி என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் குளத்தின் கீழ் கிழைவாய்க்கால் மற்றும் பிரதான வாய்க்கால்கள் ஆகியவை துப்பரவு செய்து விதைப்பு நடவடிக்கையை முன்னெடுக்கலாம் என்றும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

(ந-19)

# வெள்ள நீரின் ஊடாக நடந்து மயானம் செல்லும் அவலம்!

## முள்ளியவளை மக்கள் சுட்டிக்காட்டு



முல்லைத்தீவு, மார்ச். 1

முள்ளியவளை - நாவற்காடு மயானத்துக்குச் செல்லும் வீதியில், இன்று வரை வெள்ள நீர் வற்றாது தேங்கி உள்ளதால், வெள்ள நீரின் ஊடாகவே இறந்தவர்களின் உடலைக் கொண்டு சென்று எரியூட்ட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று கிராம மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது தொடர்பில் மக்கள் மேலும் தெரிவித்ததாவது

முள்ளியவளை - நாவல்காடு மயானத்துக்கான வீதி இதுவரை செப்பனிடப்படாத நிலையில், இறந்தவர்களின் உடல்களை மயானத்துக்கு கொண்டு செல்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றோம். கரைதுறைப்பற்று பிரதேச சபை உருவாக்கப்பட்டு இரண்டரை ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும், பிரதேச சபையின் கீழ் உள்ள மயானங்கள் மற்றும் மயானங்களுக்கான வீதிகள் என்பவை இதுவரை சீரமைக்கப்படவில்லை.

வீதியில் ஊற்று நீர் பெருக்கெடுத்து, வெள்ளமாக ஓடுகிறது. இதனால் மயானத்துக்குச் செல்லும் வீதியில் நீர் தேங்கியுள்ளது. இறந்தவர்களின் சடலங்களை வெள்ள நீரின் ஊடாகக் கொண்டு செல்லவேண்டியுள்ளது. எனவே சம்பந்தப்பட்டவர்கள் விரைந்து நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் - என்றனர்.

(ஐ-19)

# வடக்கு அம்புலன்ஸ் சாரதிகளின் இடமாற்றத்துக்கான தடை நீடிப்பு

**கொழும்பு, மார்ச். 1**

**வடக்கு மாகாணத்திலுள்ள அம்புலன்ஸ் சாரதிகளின் இடமாற்றத்தை தற்காலிகமாக இடைநிறுத்தும் நீதிமன்ற உத்தரவு தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.**

வடக்கு மாகாணத்திலுள்ள அம்புலன்ஸ் சாரதிகளின் இடமாற்றம் தொடர்பில், அகில இலங்கை மாகாண சுகாதார சேவைகள் சாரதிகள் தொழிற்சங்கத்தால், வட மாகாண பிரதம செயலாளர் உட்பட பன்னிரண்டு பேரை எதிர் மனுதாரர்களாகக் குறிப்பிட்டு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மீளாய்வு மனு, கடந்த 12ஆம் திகதி மன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்நிலையில் நீதிமன்றம் குறித்த வழக்கின் மனுதாரரான தொழிற்சங்கத்தின் மனுவில் பெயர் குறிப்பிடப்பட்ட அங்கத்தவர்களான வடமாகாண அம்புலன்ஸ் சாரதிகளின் இடமாற்றத்தை கடந்த வியாழக்கிழமை வரை இடைநிறுத்தி வைக்குமாறும், குறித்த வழக்கின் எதிர் மனுதாரர்களுக்கு எதிராக அறிவித்தல் வழங்குமாறும் கட்டளையிட்டிருந்தது.

குறித்த வழக்கு நேற்று முன்தினம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது, ஏற்கனவே நீதிமன்றால் பிறப்பிக்கப்பட்ட, அம்புலன்ஸ் சாரதிகளின் இடமாற்றத்தை தற்காலிகமாக நிறுத்தி வைக்க வேண்டும் என்ற உத்தரவு, எதிர்வரும் மே மாதம் 11 ஆம் திகதி வரை மேலும் நீடிக்கப்பட்டது.

இந்த வழக்கின் மனுதாரரான தொழிற்சங்கம் மற்றும் அதன் அங்கத்தவர்கள் சார்பில் சட்டத்தரணி ஸ்ரீரங்கநாதன் ராகுலின் அனுசரணையுடன் சட்டத்தரணி கா.நசிகேதன் மற்றும் சிரேஷ்ட சட்டத்தரணி கே.வி.எஸ் கணேசராஜா ஆகியோர் மன்றில் பிரசன்னமாகியிருந்தனர். (ஐ)



## அம்பலப்பெருமாள் குளத்தில் யானைகள் அட்டகாசம்!

முல்லைத்தீவு, மார்ச். 1

முல்லைத்தீவு அம்பலப்பெருமாள் குளம் கிராமத்தினுள் யானைகள் புகுந்து தென்னை மரங்களை அழித்துள்ளன என்று அந்தக் கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த புதன்கிழமை இரவு அம்பலப்பெருமாள் குளம் கிராமத்தில் தேவராசா செல்வகுமார் என்பவரது காணியில் உள்ள 11 தென்னை மரங்களை யானைகள் அழித்துள்ளன.

கோட்டை கட்டியகுளம் காட்டுப் பகுதி ஊடாக இந்தக் காணிக்குள் யானைகள் புகுந்து தென்னைகளை அழித்துள்ளன.

காலபோகப் பயிர்ச்செய்கை மற்றும் சிறுபோக நெற்செய்கைகளிலும் யானைகள் அழிவுகளைத் தொடர்ச்சியாக ஏற்படுத்தி வருகின்றன. துணுக்காய்ப் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கூட்டங்களில் யானைகளைக் கட்டுப்படுத்தி விவசாய நடவடிக்கைகளுக்கு உதவுமாறு தொடர்ந்து அம்பலப்பெருமாள்குளம் விவசாயிகள் கோரிக்கை விடுத்து வந்துள்ளனர்.

கடந்த கடும் மழையால் குளத்தில் நீர் நிரம்பி இருந்தபோதும், நடுக்குளத்தால் நீந்தி வந்த யானைகள் அம்பலப்பெருமாள் குளத்தின் அணைக்கட்டுக்கும் சேதம் ஏற்படுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது. அம்பலப்பெருமாள் குள கிராம மக்கள் குடியேறியுள்ள மேட்டுக் காணிகளிலும் தொடர்ச்சியாக பயிர் அழிவுகளை யானைகள் ஏற்படுத்தி வருகின்றன. இந்தச் சம்பவங்கள் தொடர்பாக கிராம அலுவலர் விபரங்களைத் திரட்டியுள்ளார்.

முல்லைத்தீவு துணுக்காய்ப் பிரதேச செயலாளர் பிரிவில் யானைகளின் தொல்லையை எதிர்கொள்ளும் கிராமங்களில் ஒன்றாக அம்பலப்பெருமாள் குளம் விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (ற-13)

## நிறுவைத் தராசு போதாமையால் உற்பத்தியாளர்கள் அசௌகரியம்

சாவகச்சேரி, மார்ச். 1

சாவகச்சேரி சந்தையில் தாம் விற்பனைக்குக் கொண்டு செல்லும் பொருள்களை எடை போடுவதற்கு ஒரேயோரு நிறுவைத் தராசு மட்டும் காணப்படுவதால் உற்பத்தியாளர்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

முன்னர் உற்பத்தியாளர்கள் நலன் கருதி நகரசபையால் மூன்று இடங்களில் தராசு வைக்கப்பட்டிருந்தது. ஆனால் தற்போது சந்தையை குத்தகைக்கு எடுத்தவர் மரக்கறி விற்பனை அலகில் மட்டும் தராசை வைத்துள்ளார்.

இதனால் வாழைக்குலை, வெங்காயம் மற்றும் பனம்பொருள்கள் போன்றவற்றைக் கொண்டு வருவோர் தராசு வைக்கப்பட்டுள்ள இடம்வரை அவற்றைத் தூக்கிச் செல்லும் நிலை காணப்படுகின்றது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)



## முல்லை. பாலங்குளத்தை அபிவிருத்தி செய்யுங்கள்

### அமைதிபுரம் மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, மார்ச். 1

முல்லைத்தீவு துணுக்காய் பாலங்குளத்தை அபிவிருத்தி செய்யுமாறு அமைதிபுரம் கிராம அலுவலர் பிரிவு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவித்துள்ளதாவது, இக்குளத்தின் கீழ் 60 ஏக்கர்களுக்கு மேற்பட்ட நிலப்பரப்பு காணப்படுகின்ற போதிலும், குளத்தில் இருந்து 10 ஏக்கர் வரையான நிலப்பரப்புக்கே நீர்ப்பாசனம் மேற்கொள்ளக்கூடியதாக உள்ளது. காலபோகத்தில் மழையை நம்பி குளத்தின் கீழ் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டாலும், சிறுபோக நெற்செய்கை மேற்கொள்வதற்கு இக் குளத்தில் நீர்ப்பற்றாக்குறை தடையாக உள்ளது. மழை காலங்களில் பெருமளவு நீர் இக் குளத்தில் இருந்து வான் வழியாக வெளியேறி கடலைச் சென்றடைகின்றது. குளத்தை அபிவிருத்தி செய்வதன் மூலம் 60 ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ள முடியும். இது தொடர்பில் கடந்த பத்து ஆண்டுகளாக துணுக்காய் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கூட்டங்களில் கோரிக்கை விடுத்தும், குளத்தின் அபிவிருத்திகள் இடம்பெறவில்லை. அணைக்கட்டை உயர்த்துதல் மற்றும் வயல் நிலங்களுக்கான வாய்க்கால்களை அமைத்தல் என்பவற்றின் மூலமே இந்தக் குளத்தின் கீழ் விவசாய முயற்சிகளை முழுமையாக முன்னெடுக்க முடியும். இக்குளத்தை நம்பி 125 வரையான குடும்பங்கள் வாழ்கின்றன இவற்றைக் கருத்திற்கொண்டு விரைவில் இக் குளத்தை புனரமைத்துத் தருமாறு கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-13)

## மாட்டுடன் மோதியது மோட்டார் சைக்கிள்

### ஒருவர் காயம்

மாட்டுடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் காயமடைந்த ஒருவர் கிளிநொச்சி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அறிவியல் நகருக்கு அண்மையில் ஏ9 வீதியில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு வீதியைக் குறுக்கறுத்துச் சென்ற மாட்டுடன், மோட்டார் சைக்கிள் மோதியே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்தில் மாங்குளம் கிழவன்குளம் பகுதியைச் சேர்ந்த 42 வயதுடைய நபர் ஒருவரே காயமடைந்த நிலையில் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (வ-12)



தொல்புரம் ஆரம்ப மருத்துவ பராமரிப்பு நிலையத்தின் (பானாவெட்டி அரசினர் மருத்துவமனை) மருத்துவர் கீர்த்திகா பாலசுப்ரமணியத்தின் சேவை நலன் பாராட்டும், மருத்துவர் வே.குருபரனின் வரவேற்புபசாரமும் மருத்துவமனை ஊழியர்களாலும் நோயாளர் நலன்புரிச் சங்கத்தாலும் அண்மையில் முன்னெடுக்கப்பட்டன. (ம)

## மாற்றுத் திறனாளிகள் அமைப்புக்கு கச்சான் உடைக்கும் இயந்திரம்

மன்னார், மார்ச். 1

மன்னார் றோட்டரிக் கழகத்தின் ஏற்பாட்டில் மாந்தை மேற்கு பிரதேச மாற்றுத் திறனாளிகள் அமைப்புக்கு கச்சான் உடைக்கும் இயந்திரம் அன்பளிப்புச் செய்யப்பட்டது.

மன்னார் றோட்டரிக் கழகத்தின் தலைவர் ஜெரோம் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை காலை இந்த நிகழ்வு நடைபெற்றது.

கொழும்பு றோட்டரிக் கழகத்தின் நிதிப் பங்களிப்புடன் மன்னார் றோட்டரிக் கழகத்தால் மாந்தை மேற்கில் உள்ள "வி கான்" மாற்றுத் திறனாளிகள் அமைப்புக்கே இவ்வாறு கச்சான் உடைக்கும் இயந்திரம் அன்பளிப்புச் செய்யப்பட்டது. உள்ளூர் உற்பத்தியை மேம்படுத்தும் நோக்கிலும், மாற்றுத்திறனாளிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கிலும் இந்த உதவி வழங்கப்பட்டது. (ப-213)



## பாகிஸ்தானின் 'பௌத்த பாதை' இலங்கைக்குச் சொல்லும் பாடம்

பாகிஸ்தானில் கட்டமைக்கப்பட்டுவரும் பௌத்த பாதை, பல்வேறு மனித உரிமைகள் தொடர்பான செய்திகளை இலங்கைக்குச் சொல்லியுள்ளது. மனித உரிமைகள் மிக மோசமாக மீறப்படும் நாடுகளின் பட்டியலில் மேற்கத்தேய தேசத்தால் அடையாளப் படுத்தப்படும் பாகிஸ்தான், மனித உரிமைகள் தொடர்பில் இலங்கைக்குப் பாடமெடுப்பதுகூட ஆசியாவின் மற்றுமொரு ஆச்சரியம்தான்.


பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் அண்மையில் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராகக் கட்டியெழுப்பப்பட்ட இந்திய - மேற்கத்தேயக் கூட்டணிக்கு சில பல செய்திகளையும் தம் பலத்தையும் காட்டவேண்டிய பொறுப்பு சீனா - பாகிஸ்தான் இலங்கை உள்ளிட்ட ஆசியக் கூட்டணிக்கு இருந்தது. இந்தப் பின்னணியில் இந்தச் சந்திப்பு இடம்பெற்ற போதிலும், இலங்கையில் சிறுபான்மை யினருக்கு எதிராக அதிலும் குறிப்பாக முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுவரும் அடக்கு முறைகளுக்கு எதிராக இம்ரான் ஏதாவது அழுத்தத்தைக் கொடுப்பார் என்ற எதிர்பார்ப்பும் இருக்கவே செய்தது. ஜனாஸா எரிப்பு உள்ளிட்ட விடயங்களில் இலங்கை அரசுக்கு இருந்த சர்வதேச எதிர்ப்பு இந்த எதிர்பார்ப்புக்கான முக்கிய காரணம். அதற்கேற்ப சிறுபான்மை மக்களின் மத உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும் என்ற செய்தியைச் சொல்லாமல் சொல்லியுள்ளார் இம்ரான் கான்.

பாகிஸ்தானில் சில பௌத்த எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றைத் தொல்பொருள் பகுதிகளாக அறிவித்துப் பாதுகாத்துவரும் பாகிஸ்தான் அதை மையப்படுத்தி சுற்றுலாவிகளை ஈர்க்கவும் திட்டமிட்டுள்ளது. அவற்றைப் பார்வையிட வருமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்சவையும் பௌத்த மக்களையும் அழைத்திருந்தார் இம்ரான். பாகிஸ்தான் ஓர் இஸ்லாமிய நாடு. இஸ்லாமைத் தீவிரமாகக் கடைப்பிடிக்கும் நாடுகளில் ஒன்று. பாகிஸ்தான் நினைத்திருந்தால் ஆப்கானிஸ்தான் செய்ததைப் போன்று அந்தத் தொல்பொருள்களை இருந்த இடம் தெரியாமல் அழித்திருக்க முடியும். அல்லது அதற்கு இஸ்லாமியச் சாயம்பூசி தன் மதத்துக்கு உரியவையாக ஆக்கியிருக்க முடியும். இதற்கு எதிராக அங்கு ஆர்ப்பாட்டங்களோ பேரணிகளோ இடம்பெற வாய்ப்பில்லை. மாறாக தீவிர முஸ்லிம் மையச் சிந்தனை கொண்டவர்களின் ஆதரவை இம்ரானின் அரசு பெற்றிருக்கலாம். ஆனால் அவ்வாறு செய்யபடவில்லை.

இம்ரான் கான் விடுத்த 'பௌத்த பாதை' தொடர்பான அழைப்பின் மையவாதம் வர்த்தகமாக இருந்தபோதிலும், பௌத்த எச்சங்கள் பௌத்தத்துக்கு உரியன என்ற சித்தாந்தத்தில் அவற்றை ஏற்றுக்கொண்டு, தமது நாட்டில் இவ்வாறான தொல்பொருள்கள் கிடைத்துள்ளன. அவற்றை பௌத்தர்கள் பார்வையிடலாம் என்று அழைத்துள்ள பெருந்தன்மைக்கு எத்தனை பாராட்டுக்களும் தகும்.

இலங்கையிலும் பல்வேறு தொல்பொருள் சின்னங்கள் இருக்கின்றன. அவை தமிழர்களுக்குடையதாக, இந்துக்களுடையதாக இருந்தாலும் அவற்றுக்குப் பௌத்த சாயம் பூசி சிங்கள - பௌத்த பேரினவாதத்துக்குரிய தொல்பொருள்கள் என்றாக்கிவிட வேண்டும் என்பது தான் கோத்தாபய தலைமையிலான அரசின் செயற்பாடுகளாக இருக்கின்றன. சிறுபான்மை மக்களின் மத, அரசியல் உரிமைகளை எவ்வளவு முடியுமோ அவ்வளவு நசுக்குவதுதான் தமது அரசினதும் அரசியலினதும் இருப்பு என்று இங்குள்ள பேரினவாதிகளின் அட்டவணைகள் நகர்ந்துசெல்லும் நிலையில் பாகிஸ்தானின் பௌத்த பாதை பல செய்திகளைச் சொல்லும் விதமாகத் தான் அமைந்துள்ளது. அதுவும் ஆழமாக.

### இன்றைய கருத்தோவியம்




நன்றி - சஜித் பண்டார

# ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்ப விண்ணப்பங்களைக் கோருங்கள்

### கல்வி அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்பு



கொழும்பு,மார்ச் 1

**நீண்ட காலமாக பாடசாலைகளில் நிலவும் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் மற்றும் கணினித் தொழில்நுட்ப ஆசிரியர்களுக்கான வெற்றிடங்களை நிரப்ப, உடனடியாக விண்ணப்பங்களைக் கோருங்கள் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, கல்வி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.**

திருகோணமலை கிவுலேகட வல வித்தியாலய வளாகத்தில் இடம்பெற்ற 'கிராமத்துடன் உரையாடல்' நிகழ்வில் அவர் இந்த அறிவுறுத்தலை விடுத்தார் என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமூகத்தின் மிகக் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு லட்சம் பேருக்கு தொழில் வழங்கும் நிகழ்ச்சித் திட்டம் வறுமையை ஒழிக்கும் நோக்கத்துடன் நடைமுறைப்படுத்தப்பட்டது. ஏழ்மையான குடும்பங்களின் முன்னேற்றத்துக்காக வடிவமைக்கப்பட்ட இந்தத் திட்டத்தை சீர்குலைக்க வேண்டாம் என்று ஜனாதிபதி கேட்டுக் கொண்டார்.

இதேவேளை விவசாயிகளைச் சந்தித்த ஜனாதிபதி, நெல் அறுவடையை அரசுக்கோ அல்லது கொள்வனவு செய்யும் எந்தவொரு தரப்பினருக்கோ தங்களது விருப்பத்தின் பேரில் விற்பனை செய்ய முடியும். அரசு அதற்கு எவ்வித நிபந்தனையையும் விதிக்கவில்லை என்றும் தெரிவித்தார்.

போரின் பின்னர் மீளக் குடியேறிய கிராம மக்களின் விபரங்கள் குறித்து ஆராய்ந்து அவற்றுக்கான உறுதிப் பத்திரங்களை வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். (கு-இ)

## ஐ.ம. சக்தியின் முதல் வருடம்

கொழும்பு.மார்ச் 1

ஐக்கிய மக்கள் சக்தியின் முதலாவது நிறைவாண்டு எதிர்வரும் மார்ச் 15 ஆம் திகதி கொழும்பு ஹைட்பாக் மைதானத்தில் இடம்பெறும் என்று கட்சியின் தேசிய அமைப்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வு சுகாதார பரிந்துரைகளுக்கு இணங்க, குறைந்த எண்ணிக்கையிலான மக்கள் பங்கேற்புடன், நடத்தப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

## வழிகாட்டி வெளிவந்தாலே உடல் அடக்கம் செய்யப்படும்

### சுகாதார அமைச்சு திட்டவட்டம்

கொழும்பு. மார்ச் 1

கொரோனாவால் உயிரிழந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்வதற்கான வழிகாட்டி வெளியிடப்பட்ட பின்னரே அதற்குரிய அனுமதி வழங்கப்படும் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் அசேல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

உடல்களை அடக்கம் செய்வதற்கான இடங்களை எதிர்வரும் நாள்களில் தெரிவு செய்ய வேண்டும். நீர்நிலைகள் மற்றும் சுற்றுச்சூழல்கள் என்பவற்றை ஆராய்ந்து சுகாதார அமைச்சர் மற்றும் செயலாளர் ஆகியோரின் அனுமதியுடன் ஜனாதிபதியின் கொரோனா ஒழிப்பு செயலணிக்கு சமர்ப்பித்து இது தொடர்பான அனுமதி பெறப்படும். மிக விரைவில் இது தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.

கட்டாயம் அடக்கம் செய்ய வேண்டியிருந்தால் அதுவரை சடலங்களை மருத்துவமனையின் பிரேத அறையில் குளிரூட்டியில் வைக்கமுடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (வ-319)

# இலங்கையின் உள்விவகாரங்களில் யாரும் தலையீடு செய்ய வேண்டாம்

## கோருகிறது சீனா

**கொழும்பு, மார்ச். 1**

**அரசியல் உறுதித்தன்மையையும், தேசிய ஒற்றுமையையும் இலங்கை நிலை நிறுத்தும் என்று சீனா நம்புகிறது என அந்த நாட்டின் வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் வாங் வென்பின் தெரிவித்துள்ளார்.**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 46ஆவது அமர்வில் நடைபெற்ற இலங்கை தொடர்பான நாடு சார்ந்த தீர்மானம் குறித்த கலந்துரையாடலின்போது இலங்கையின் மனித உரிமை நிலைமை குறித்து சில மேற்கத்தேய நாடுகள் கேள்வி எழுப்பின. இவ்விடயம் தொடர்பிலேயே சீனாவின் வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் வாங் வென்பின் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

ஒரு நட்பு நாடாக இலங்கை, அரசியல் உறுதித்தன்மை மற்றும் தேசிய ஒற்றுமையை நிலைநிறுத்தும். மேலும் தேசிய வளர்ச்சியில் அதிக சாதனைகளை இலங்கை செய்யும் என்றும் சீனா நம்புகிறது.

மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் நிலையான சமூகப் பொருளாதார வளர்ச்சியை முன்னேற்றுவதற்கும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கும் பாதிக்கப்படக்கூடிய குழுக்களின் உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிப்பதற்கும் தேசிய நல்லிணக்கத்தை ஊக்குவிப்பதற்கும் பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவதற்கும் இலங்கை அரசு மேற்கொண்ட முயற்சிகளை சீனா பாராட்டுகிறது. இதேவேளை அரசியல் நோக்கங்களுக்காக மனித உரிமைகளைப் பயன்படுத்துவதை சீனா கடுமையாக எதிர்க்கின்றது.

அனைத்து நாடுகளும் ஐ.நா. சபையின் நோக்கங்களையும் கொள்கைகளையும் கடைப்பிடிக்க வேண்டும். ஏனைய நாடுகளின் இறையாண்மையை மதிக்க வேண்டும். மேலும், ஏனைய நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடும் நகர்வுகளை நிராகரித்து அரசியல் அழுத்தத்தை செலுத்த வேண்டும். அனைத்து நாடுகளும் ஆக்கபூர்வமான உரையாடல் மற்றும் ஒத்துழைப்பு ஊடாக மனித உரிமைத்துறையில் உள்ள வேறுபாடுகளை நிவர்த்தி செய்ய வேண்டும் -என்றார். (ப)

# ஐ.நா. ஆணையாளரின் அறிக்கை பக்கச்சார்பானது

## நீதி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச். 1

ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை பக்கச்சார்பானது என நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்:

ஐ.நா. மனித உரிமை அமர்வில் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்படும் பிரேரணை இலங்கைக்கு பாதகமாக அமையாத வகையில் மாற்றம் செய்யப்படுமென்று நம்புகிறேன். மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை பக்கச்சார்பானது. போரின் போது மனித உரிமை மீறல்கள் நடந்தன என அவர் குற்றம் சுமத்தியுள்ளார். தமிழ் மக்களுக்கு எதிராக போர் மேற்கொள்ளப்படவில்லை. மக்கள் புலிகளிடமிருந்து தப்பி ராணும் உள்ள பகுதிக்குத்தான் வந்தனர். அவர்களுக்கு அரசால் பாதிப்பு இருந்தால் புலிகள் இருக்கும் பக்கத்துக்கே சென்றிருப்பர். எனவே அவரின் குற்றச்சாட்டு பக்கச்சார்பானது. இலங்கைக்கு எதிரான பிரேரணை இன்னும் சமர்ப்பிக்கப்படவில்லை. வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன மற்றும் துறைசார் நிபுணர்கள் குழு அந்த நாடுகளுடன் பேசி தேவையான மாற்றங்களைச் செய்வர்.

அந்தப் பிரேரணை அதேபோன்று சமர்ப்பிக்கப்பாது என்று நம்புகிறேன். நாட்டுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் இதன் முடிவு அமையும்.

தற்போதைய நிலைமைகள் தொடர்பில் உண்மை நிலை அந்த நாடுகளுக்குத் தெளிவுபடுத்தப்படும். அவர்கள் பகுத்தறிவுடன் சிந்தித்து அரசுடன் இணைந்து செயற்படுவார்கள் என நம்புகிறோம் என்றார். (ப)

# மைத்திரி மீது வழக்கு தொடரத் தடையில்லை

கொழும்பு, மார்ச். 1



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணையை முன்னிறுத்தி முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக வழக்குத் தொடர எந்தத் தடையும் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் பிரதீபா மஹானாம இதனைத் தெரிவித்துள்ளார்.

மைத்திரியின் சார்பில் வாதாடும் சட்டத்தரணிகள் அவரது பதவி சிறப்புரிமை தொடர்பில் சுட்டிக்காட்டி வழக்கை நிராகரிக்குமாறு கோரிக்கை விடுக்கலாம். ஆனாலும், வோட்டார்ஸ் எட்ஜ் வழக்கில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு நட்ட ஈடும் செலுத்த நேரிட்டது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (வ-இ)

# சர்வதேச விசாரணை பொறிமுறை அவசியம்

## கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் வலியுறுத்து

கொழும்பு, மார்ச். 1

இலங்கையில் பாரதூரமான மனித உரிமை மீறல்களுக்கு வழிவகுத்த கொள்கைகளும், செயல்களும் மீண்டும் நிகழக்கூடிய போக்கு தற்போது காணப்படுகின்றது என்று கனடா நாடாளுமன்றில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மார்க்கம்ஸ்ரோவில் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் ஹெலெனா ஜஸெக் இலங்கை மனித உரிமை நிலைமை தொடர்பில், கனடா நாடாளுமன்றில் உரையாற்றியுள்ளார்.

இது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் தார்மீக அடிப்படையிலான பலமான நிலைப்பாடு ஒன்றை எடுக்குமாறு கனேடிய வெளியுறவுத் திணைக்களத்தை ஊக்குவிப்பது, மனித உரிமைப் பேரவையில் இலங்கை குறித்த சிறப்பு அறிக்கையாளர் ஒருவரை நியமிப்பதற்கு ஆதரவளிப்பது, சர்வதேச மனித உரிமைகள் உப குழு இலங்கை குறித்த ஆய்வொன்றை மேற்கொள்ளவேண்டுமெனக் கோருவது மற்றும் இந்தச் சபையில் நிறைவேற்றப்பட்ட இனப்படுகொலைக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்குச் சுதந்திரமான, சர்வதேச விசாரணைப் பொறிமுறையை அமைக்குமாறு ஐக்கிய நாடுகள் அமைப்பைக் கோரும் பிரேரணையைச் செயற்படுத்துவது போன்ற நடவடிக்கைகளை நாம் எடுக்கலாம் என்று பேர்ள் போன்ற அமைப்புக்கள் பரிந்துரைத்துள்ளன.

எனவே இந்தப் பரிந்துரைகளை ஆதரிக்கிறேன். " என்றும் அவர் உரையாற்றினார். -என்றுள்ளது. (க-இ)

# தேசியப் பட்டியல் ஆசனம் ஐ.தே.க. முடிவில்லை!

கொழும்பு, மார்ச். 1

நாடாளுமன்ற தேசியப் பட்டியல் ஆசனம் குறித்து இதுவரை ஐக்கிய தேசியக் கட்சி எந்தவொரு உடன்பாட்டையும் எட்டவில்லை என அந்தக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

பல்வேறு பெயர்கள் முன்மொழியப்பட்டாலும், இதுவரை எந்த உடன்பாடும் எட்டப்படவில்லை. நான் தனிப்பட்ட முறையில் தலைவர் ரணில் விக்ரமசிங்கவின் பெயரை முன்மொழிந்துள்ளேன்.

இருப்பினும் இந்தப் பரிந்துரைக்கு ஐக்கிய தேசியக் கட்சி அங்கீகாரம் வழங்கவில்லை. கடந்த ஓகஸ்ட் மாதம் நடந்த நாடாளுமன்றத் தேர்தலைத் தொடர்ந்து தேசியப் பட்டியல் ஆசனத்துக்கு ஒரு உறுப்பினரை நியமிக்க ஐக்கிய தேசியக் கட்சி தவறிவிட்டது. இந்த நிலையில் தேர்தல் தோல்வியை அடுத்து கட்சியை மறுசீரமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன -என்றார். (ம-இ)

# பயங்கரவாதச் செயல்களுக்கு நாட்டின் தலைவரே பொறுப்பு

## அமைச்சர் டிலும் அமுனுகம தெரிவிப்பு

கொழும்பு, மார்ச்.1

நாட்டில் பயங்கரவாத செயல்கள் இடம்பெற்றால் அதற்கு அந்நாட்டின் ஜனாதிபதியே பொறுப்புக் கூற வேண்டும் என்று இராஜாங்க அமைச்சர் டிலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

கண்டியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நாளை நாட்டில் குண்டுவெடித்தால் ஜனாதிபதியும் பிரதமரும் பாதுகாப்பு செயலாளரும் முப்படைகளின் தளபதியுமே அதற்குப் பொறுப்பேற்க வேண்டும். இது கசப்பான யதார்த்தமாகும். உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கும் இது பொருந்தும். எனவே ஜனாதிபதி ஆணைக்குழு இதனை தெளிவுபடுத்த வேண்டியதில்லை. அவ்வேளை நாட்டின் தலைவராக இருந்தவரையே அதற்குப் பொறுப்பாளியாக்க வேண்டும் -என்றார். (வ-இ)

# சுதந்திரக் கட்சியை அழிக்க சதித்திட்டம்

## ரோஹன லக்ஸ்மன் குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச்.1

சிறிலங்கா சுதந்திரக் கட்சியையும், அதன் தலைவர்களையும் இல்லாதொழிக்கும் சதித் திட்டம் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் பேராசிரியர் ரோஹன லக்ஸ்மன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் விசாரணை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை மூலம், கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. இது சதித் திட்டத்துக்கான ஒரு அம்சம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

# தமிழ்க் கட்சிகளுடைய ஒற்றுமையே அவசியம்

## சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிப்பு

**வவுனியா, மார்ச். 1**

**தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றித்துச் செயற்படுவது குறித்தே கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. தமிழ்த் தேசியப் பேரவை உருவாக்கத்துக்கும் இதற்கும் இடையில் எந்த வேறுபாடுகளையும் நான் காணவில்லை.**

இவ்வாறு ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் இணைப் பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கட்சிகள் மற்றும் மதத் தலைவர்கள் இடையிலான சந்திப்பு வவுனியாவில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. சந்திப்புத் தொடர்பில் கருத்துத் தெரிவித்த சுரேஷ், தமிழ்த் தேசியப் பரப்பில் இயங்கும் அரசியல் கட்சிகள் ஒன்றித்துச் செயற்படுவது தொடர்பில் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

தற்போதைய சூழலில் தமிழ் மக்கள் மீதான அடக்குமுறைகளை எதிர்த்துச் செயற்படுவதற்கு இணக்கம் காணப்பட்டது. தமிழ்த் தேசியப் பேரவையை உருவாக்கும் முயற்சிக்கும் இதற்கும் இடையில் வேறுபாடுகளை நான் காணவில்லை, என்றார். இந்தக் கூட்டத்தில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், சிவசக்தி ஆனந்தன், ரெலோவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கல நாதன், வினோநோதராதலிங்கம், மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் சார்பில் க.துளசி மற்றும் முன்னாள் மாகாணசபை உறுப்பினர் ப.சத்தியலிங்கம் ஆகியோரும் வேலன் சுவாமிகள், தென்கையிலை ஆதீன குருமுதல்வர் அகஸ்தியர் அடிகளார், திருமூலர் தம்பிரான் அடிகளார், திருகோணமலை மறை மாவட்ட ஆயர் நோயல் இமானுவல், மன்னார் மறை மாவட்ட ஆயர் இமானுவல் பெர்னாண்டோ மற்றும் யாழ். மறை மாவட்ட குரு முதல்வர் ஜெபரட்ணம் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஒ-18,110)

# கேதீச்சர வளைவுக்கு நீதிமன்றம் அனுமதி

சிவராத்திரியை முன்னிட்டு திருக்கேதீஸ்வர மாந்தை சந்தியில் அலங்கார வளைவு அமைப்பதற்கு மன்னார் மேல் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

திருக்கேதீஸ்வரத்தில் சிவராத்திரி விழா எதிர்வரும் மார்ச் மாதம் 11 ஆம் திகதி நடைபெற உள்ளது.

இதற்காக மாந்தை சந்தியில் அலங்கார வளைவு அமைக்க மன்னார் மேல் நீதிமன்றத்தால் எதிர்வரும் 9ஆம் திகதி முதல் 13ஆம் திகதி வரை அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

திருக்கேதீஸ்வர அலங்கார வளைவு சம்பந்தமான வழக்கு கடந்த 22ஆம் திகதி மன்னார் மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதி எம். எம். மிஹால் இந்த அனுமதியை வழங்கியிருந்தார். (வ-213)

# யானைகளின் அட்டகாசம் தருமபுரத்தில் அதிகரிப்பு!

*மக்களின் வாழ்வாதாரங்கள் பாதிப்பு*

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட தருமபுரம் பகுதியில் கடந்த சில நாள்களாக காட்டு யானைகள் மக்களின் தென்னை மரங்கள் மற்றும் பலா மரங்கள் என்பனவற்றை அழித்து வருகின்றன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை 2 மணியளவில் மக்கள் குடியிருப்புக்களுக்குள் புகுந்த யானையொன்று அங்கிருந்த பல பயன்தரும் தென்னைமரம் மற்றும் பலா மரத்தின் காய்கள் என்பவற்றை அழித்துவிட்டுச் சென்றுள்ளது. இந்தப் பகுதியில் யானை வேலி அமைக்க சம்மந்தப்பட்ட வர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-113)

## முதலாம் பக்கத் தொடர்ச்சி....

### 7 வயதுச்...

பயனின்றி உயிரிழந்தான். அப்துல் ரஹ்மான் தயா (வயது7) என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளான். சிறுவனைத் தாக்கியிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படும் உடன்பிறவாச் சகோதரனான 17 வயதுச் சிறுவன் ஒருவன் தலைமறைவாகியுள்ளான்.

இந்தச் சம்பவம் கிளிநொச்சி, கச்சேரி வீதியில் நடந்துள்ளது. மனைவி மட்டக்களப்பு சென்றதை அடுத்து, தந்தை தனது 9 வயது, 7 வயது மற்றும் 4 வயது மகன்களை அழைத்துக்கொண்டு தனது தமையன் வீட்டில் சென்று தங்கியுள்ளார். கடந்த 22ஆம் திகதி அதிகாலை முதல் தந்தையைக் காணவில்லை. அத்துடன் தமையன் வீட்டில் உள்ள மாடும் காணாமல் போயிருந்தது.

சிறுவர்களின் தந்தையே அந்த மாட்டைக் கொண்டு சென்றிருக்கலாம் என தமையன் வீட்டினர் சந்தேகித்துள்ளனர். சிறுவர்களின் தந்தைமீது ஏற்கனவே சில திருட்டுக் குற்றச்சாட்டுக்கள் உள்ளன என்றும் கூறப்படுகின்றது.

மாடு காணாது போனதை அடுத்து, தமையனின் மகனான 17 வயதுச் சிறுவன், 9 வயதுச் சிறுவன் மற்றும் 4 வயதுச் சிறுவன் ஆகியோரைக் கடுமையாகத் தாக்கியுள்ளார் என்று தெரியவருகின்றது. அதன்பின்னர் 7 வயதுச் சிறுவனை மாங்காய் பிடுங்க என்று கூறி அழைத்துச் சென்றுள்ளார். பின்னர் அவன் மட்டுமே வீடு திரும்பியிருக்கின்றான்.

சிறுவனைக் காணாததால் தமையனின் மனைவி மற்றும் ஏனைய இரு சிறுவர்களும் இணைந்து தேடியுள்ளனர். தமையனுக்குச் சொந்தமான இன்னொரு வீட்டில் மயங்கிய நிலையில் 7 வயதுச் சிறுவன் மீட்கப்பட்டான். அவன் உடனடியாகக் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டான். தாக்குதலுக்கு இலக்கான 4 வயதுச் சிறுவனும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளான். இவர்கள் இருவரும் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர்.

இரு சிறுவர்களும் சிகிச்சை பெற்று வந்த நிலையில், 4 வயதுச் சிறுவன் ஐந்து நாள் சிகிச்சையின் பின்னர் வீடு திரும்பியுள்ளான். தொடர்ந்து சிகிச்சை பெற்றுவந்த 7 வயதுச் சிறுவன் சிகிச்சை பயனின்றி நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளான்.

இறப்பு விசாரணைகள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமாரால் மேற்கொள்ளப்பட்டன.

சிறுவனின் தலையில் கூரிய ஆயுதத்தால் நடத்தப்பட்ட தாக்குதலால் மூளையில் ஏற்பட்ட இரத்தக்கசிவே இறப்புக்குக் காரணம் என்று உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சிறுவனை அழைத்துச் சென்ற 17 வயதுச் சிறுவன், கடுமையாகத் தாக்கியிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

சிறுவர்கள் மீது தாக்குதல் நடத்தினான் என்று கூறப்படும் 17 வயதுச் சிறுவன் தலைமறைவாகியுள்ளான். இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (எ-26)

### ஜெனிவாவை...

கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனாத் தொற்றால் இறப்பவர்களின் உடல்களை அடக்கம் செய்தல், மாகாண சபைகளுக்கான தேர்தல் மற்றும் காணாமல்போனோர் தொடர்பான பிரச்சினை ஆகிய விடயங்களில் ஜெனிவா மூலமே தீர்வு கிடைக்குமென்று மக்கள் நினைக்கின்றனர்.

எவ்வாறாயினும் மாகாண சபைகளுக்கான தேர்தல் தொடர்பான தீர்மானம் நாட்டின் அரசமைப்புக்கு அமையவே எடுக்கப்பட வேண்டுமே ஒழிய ஜெனிவாவின் அழுத்தங்களால் எடுக்கப்படும் தீர்மானங்களாக இருக்கக் கூடாது என்றே நாம் எதிர்பார்க்கின்றோம்.

இதேவேளை, ஜனாதிபதி ஆணைக்குழுக்களின் ஊடாக நாட்டின் நீதிமன்றங்களில் உள்ள வழக்குகளை நீக்கப் பரிந்துரைகளை வழங்கும் நிலைமையில் இங்கு நீதித்துறை சுயாதீனமாக இயங்குகின்றது என்று வெளிவிவகார அமைச்சரால் ஜெனிவாவுக்குக் கூற முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

அதேபோன்று நாட்டின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவராக வெளிவிவகார இராஜாங்க அமைச்சரின் தந்தை பதவி வகிக்கும் நிலையில், அந்த ஆணைக்குழுவும் சுயாதீனமானது என்றும் அவரால் கூற முடியாது - என்றார். (எ-22)

### குழுமோதல்....

புரம் மற்றும் மதுராநகரைச் சேர்ந்த இரு பகுதியினருக்கு இடையே அதிகாலை ஒரு மணியளவில் தர்க்கம் ஏற்பட்டுள்ளது. பின்னர் அது மோதலாக மாறியுள்ளது.

அதில் ஆச்சிபுரத்தைச் சேர்ந்த நால்வரும், மதுராநகரைச் சேர்ந்த இருவரும் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாக சிதம்பரபுரம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-110)

### வயோதிபரின்...

கான வேலைகளில் ஈடுபட்டிருந்த முதியவர் ஒருவரை, பிக்கு தலைமையிலான தொல்லியல் திணைக்கள குழுவினர் அச்சுறுத்தியுள்ளனர். அதுமட்டுமன்றி பொலிஸார் மற்றும் வன வளத் திணைக்களத்தினரை ஏவிவிட்டு, துப்புரவுப் பணிகளுக்கு தடைவிதித்துமுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

தண்ணிமுறிப்பு கிராம அலுவலர் பிரிவில் குமுளமுனை தண்ணிமுறிப்பு குள வீதிக்கு அருகாமையில் அமைந்துள்ள தனது காணியை, காணி உரிமையாளரான பேரானந்தம் என்பவர் துப்புரவு செய்தபோதே சம்பவம் இடம்பெற்றது. இந்த இடம் குருந்தூர்மலைக்குச் சொந்தமான தொல்லியல் புராதன பூமி என்று பிக்கு தெரிவித்ததோடு, இங்கு எந்த வேலைகளிலும் ஈடுபடமுடியாது, எவருக்கும் நிலங்கள் இல்லை என்று தெரிவித்துள்ளார்.

சம்பவம் நடைபெற்றுக்கொண்டிருந்த நிலையில், அங்குள்ள மக்கள் ஊடகங்களுக்குத் தகவல் வழங்கினர். அங்கு சென்ற ஊடகவியலாளர் ஒருவரின் ஊடக அடையாள அட்டையை வாங்கிய பொலிஸார், அதிலுள்ள விவரங்களைப் பதிவுசெய்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-இ)

# தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஒன்றிணைவு வரவேற்புக்குரியது

## தமிழர் சம உரிமை இயக்கத்தின் பொதுச் செயலாளர் தெரிவிப்பு

**கொடிகாமம், மார்ச் 1**

**தமிழ்த் தேசிய பேரவையாக தேசியத்தை நேசிக்கும் சகல தமிழ் கட்சிகளும் ஒன்றிணைய முன்வந்திருப்பதை தமிழர் சம உரிமை இயக்கம் வரவேற்கின்றது என்று தமிழர் சம உரிமை இயக்கத்தின் பொதுச் செயலாளர் நிகேதன் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது.

இந்தத் தருணம் கடந்த 3 ஆண்டுகளுக்கு முன் உள்ளூராட்சி தேர்தல் களத்தில் தமிழ் மக்கள் பேரவையின் கொள்கைப் பிரகடனங்களை ஏற்று அப்போது சில தமிழ்த் தேசிய சக்திகளோடு இணைந்து தேர்தல் களத்தை சந்தித்தது.

அதேநேரம் பல தமிழ்க் கட்சிகளை ஒன்றிணைக்க பல முயற்சிகளை நாம் உட்பட தமிழ் மக்கள் பேரவை, மதத் தலைவர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் போன்ற பல தரப்பினரும் முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் அவை வெற்றிபெற முடியவில்லை.

தேர்தலுக்கு பின்னர் தனித்து பயணித்த தமிழர் சம உரிமை இயக்கம் இந்த முயற்சிகளில் கரிசனை கொண்டிருந்த போதிலும், பிடிவாதங்களைத் தாண்டி எம்மவரை ஒன்றிணைக்க முடியவில்லை.

தற்போது காலத்தின் கட்டாயத்தை உணர்ந்து எமது மரபுரிமைகள் மற்றும் ஆதி வழிபாட்டிடங்கள் ஆகியன ஆக்கிரமிக்கப்பட்டதுடன் இன, மத, மொழி, பண்பாட்டுத் தளங்களில் தமிழ்த் தேசியம் தொடர்ந்தும் சிதைக்கப்பட்டு வரும் நிலையிலும் தமிழ் தேசியக் கட்சிகள் ஒன்றிணைய முன் வந்திருப்பது மனதுக்கு நிறைவைத் தருகின்றது.

எமது தமிழர் சம உரிமை இயக்கத் தலைமைத்துவச் சபை எம்மால் பெயரிடப்பட்டு பங்குதாரராக உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசிய பேரவையை தற்போது அனேக தமிழ் கட்சிகள் பொதுப் பெயராகக் கொண்டு தமிழ்த் தேசிய தளத்தில் பொது வேலைத்திட்டத்துடன் இயங்குவதை உளப்பூர்வமாக வரவேற்பதுடன் பூரண சம்மதத்தையும் ஆதரவையும் தெரிவித்து நிற்கின்றோம் -என்றார். (ற-159)



# கிழக்கு மாகாண ஆளுநர் செம்பிமலைக்கு களப்பயணம்

திருகோணமலை, மார்ச் 1

திருகோணமலை மாவட்டத்தின் குச்சவெளி செம்பிமலை பகுதியை கலாசார சுற்றுலாப் பகுதியாக சீரமைக்கும் நோக்கில் அதனைப் பார்வையிட கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் களப்பயணம் ஒன்றை கடந்த வெள்ளிக்கிழமை மேற்கொண்டார்.

இதன்போது அங்கிருந்த தொல்லியல் சிதைவுகள் மற்றும் செம்பீஸ்வரர் ஆலயம் உள்ளிட்டவற்றைப் பார்வையிட்டதோடு, அடுத்த கட்ட நடவடிக்கை குறித்தும் கலந்துரையாடப்பட்டது. (ச-இ)

# ஜனாஸாக்கள் எரிப்பு: குடும்பங்களுக்கு நஷ்டஈடு

## அரசிடம் கோரிக்கை

கொழும்பு.மார்ச் 1

கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தவர்களின் ஜனாஸாக்களை எரித்தமைக்காக, அவர்களின் குடும்பத்தினருக்கு இழப்பீடுகளை வழங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார். காலியில் நடைபெற்ற கூட்டமொன்றில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

“சர்வதேச அழுத்தங்கள் காரணமாகவே கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழப்பவர்களை அடக்கம் செய்வதற்கு அரசு அனுமதி வழங்கியது.

ஆனாலும் குறித்த தீர்மானத்தை மேற்கொள்வதற்கு முன்னர், கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் ஜனாஸாக்களை அடக்கம் செய்யாமல் அவற்றை எரித்தமைக்காக அவர்களின் உறவுகளுக்கு அரசு இழப்பீடு வழங்க வேண்டும்.

இதேவேளை முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவை அரசியல் ரீதியாக தோற்கடிப்பதற்கு சர்வதேச ரீதியில் சதித்திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அவற்றையும் தோற்கடிப்பதற்குத் தொடர்ந்து போராடுவோம். -என்றார். (க-இ)

## மாகாணசபை முறைமையின்

# நிறைவேற்றும் அதிகாரத்தை முதலமைச்சருக்கு வழங்குக!

## ஐக்கிய சுதந்திர முன்னணியின் செயலாளர் வலியுறுத்து

திருகோணமலை, மார்ச்.1



தற்போதுள்ள அரசமைப் பின்படி, முதலமைச்சர் என்பவர் தீர்மானங்களை முன்மொழிபவராக இருக்கின்ற நிலையில், அதனை நிறைவேற்றுகின்ற அதிகாரம் கொண்டவராக ஆளுநரே இருக்கின்றார். இந்த முறைமை மாற்றப்பட வேண்டும். முதலமைச்சரே நிறைவேற்றும் அதிகாரம் கொண்டவராக இருக்க வேண்டும். இவ்வாறு தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் செயலாளர் வ.கமலதாஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

மத்திய அரசால் நியமிக்கப்படுகின்ற, மத்திய அரசுக்கு ஆமாம் போடுகின்ற ஆளுநர் அதிகாரத்தை நாங்கள் விரும்பவில்லை. மாகாணசபைத் தேர்தல் ஒரு அராஜகமான போக்கில் இன்றுவரை நடத்தப்படாமல் பிற்போடப்பட்டு வருகின்றது. எங்களைப் பொறுத்தவரையில் வடக்கு மாகாணமாக இருந்தாலும் சரி, கிழக்கு மாகாணமாக இருந்தாலும் சரி எவருக்கும் தங்கள் உரிமை மறுக்கப்படாதவாறு தங்கள் அரசாட்சியை அமைப்பதற்கான வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும். இந்த வகையில் நாங்கள் அனைத்துத் தமிழ்த் தேசியத்தை நேசிக்கின்ற சக்திகளுடன் இணைந்து கிழக்கு மாகாண மக்களுக்கு ஒரு தனி மாகாண ஆட்சியை நிறுவுவதற்கு ஒத்துழைப்பு வழங்கத் தயாராக உள்ளோம்.

இதில் சிங்களவர்களையும் உள்வாங்க வேண்டும். அவர்களையும் உள்வாங்கியவாறு ஒரு மாகாணசபை ஆட்சியை தமிழர்கள் மந்திரி சபையைக் கொண்டு அமைக்க வேண்டும். ஆனால், ஆளுநர் நிறைவேற்று அதிகாரியாக இருக்கக் கூடிய மாகாணசபையை நாங்கள் விரும்பவில்லை. இந்த முறைமை மாற்றப்பட வேண்டும். முதலமைச்சரே நிறைவேற்றும் அதிகாரம் கொண்டவராக இருக்க வேண்டும். அல்லது ஒரு செனட் சபை உருவாக்கப்பட்டு அதனூடாக முதலமைச்சர் நிறைவேற்றும் அதிகாரத்தைப் பெற்றவராக இருக்க வேண்டும். அதனையே நாங்கள் புதிய அரசமைப்புக்கு எங்கள் முன்மொழிவாக வைத்துள்ளோம் -என்றார். (ற-150)



# அடக்க விவகாரத்தை அரசியலாக்காதீர்கள்!

## மருத்துவ அதிகாரிகள் சங்கம் வலியுறுத்து

கொழும்பு.மார்ச்.1

கொரோனாத் தொற்றால் மரணிப்போரின் உடலை அடக்கம் மற்றும் தகனம் செய்வது தொடர்பான விடயத்தை அரசியலாக்க வேண்டாம் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

ஏனைய நாடுகளில் இருக்கும் நடைமுறையைக் கணக்கில் எடுத்து, விஞ்ஞான ரீதியாகச் சரியான வழிமுறையை அரசு பின்பற்ற வேண்டும்.

அனைத்து மக்களின் உரிமைகளையும் பாதுகாக்க அரசு நேரடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்தியக் குழு உறுப்பினர் மருத்துவர் ருவான் ஜயசூரிய தெரிவித்துள்ளார். (க-இ)

# துறைமுக முறைகேடுகளை தடுக்க புலனாய்வு அலுவலகம்

கொழும்பு, மார்ச். 1

கொழும்பு துறைமுகத்துக்குள் நடக்கும் முறைகேடுகளைக் கட்டுப்படுத்த புலனாய்வுப் பிரிவின் அலுவலகம் ஒன்றை ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவ் அலுவலகம் மூலம், நீண்ட காலமாக இடம்பெற்ற முறைகேடுகளைக் கண்டறியவும், எதிர்வரும் காலங்களில் இடம்பெறவுள்ள முறைகேடுகளைக் குறைக்கவும், இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று துறைமுகங்கள் அதிகார சபையின் தலைவர் ஜெனரல் தயா ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

புலனாய்வுப் பிரிவின் அலுவலகத்தை ஏற்படுத்தும் நடவடிக்கை தற்போது இறுதிக் கட்டத்தில் உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ப)

# பூநகரி நீர்ப்பாசனக் குளங்களை அபிவிருத்தி செய்யக் கோரிக்கை

**கிளிநொச்சி, மார்ச் 1**

**கிளிநொச்சி, பூநகரியிலுள்ள இரு நீர்ப்பாசனக் குளங்களையும் முழுமையாக அபிவிருத்தி செய்து தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**



பூநகரியின் கரியாலை நாகபடுவான் குளம் மற்றும் குடமுருட்டிக்குளம் ஆகிய நீர்ப்பாசனக் குளங்கள் முழுமையாக அபிவிருத்தி செய்யப்படாத நிலையில் உள்ளன. குளங்களின் அணைக்கட்டுகள் நீண்ட காலமாக புனரமைக்கப்படாமையால் மழை காலத்தில் மண் மூடைகளை அடுக்கி குளங்களை விவசாயிகள் பாதுகாக்கின்றனர். கிளிநொச்சி மாவட்டத்திலேயே மழை காலத்தில் வேகம் குறைந்து நீர் நிரம்புகின்ற குளமாக கரியாலை நாகபடுவான்குளம் உள்ளது. இதனால் பூநகரி கடலைச் சென்றடையும் நீரை இக் குளத்துக்குத் திருப்பி விடுகின்ற வழிவகைகள் உருவாக்கப்பட வேண்டும் என நீண்ட காலமாக விவசாயிகள் கோரிக்கை விடுத்து வருகின்றனர். அக்கராயன் ஆறு வழியாக குடமுருட்டிக் குளம் நிரப்பப்பட்டாலும் குளத்தின் அணைக்கட்டு அபிவிருத்தி செய்யப்படாமையால் குளத்தில் கூடுதலான நீர் தேக்கி வைக்க முடியவில்லை. இதனால் அதை ஆழமாக்கி அணைக்கட்டைப் பலப்படுத்துவதன் மூலம் குளத்தில் கூடுதலான நீரைச் சேமிக்க முடியும் என குடமுருட்டி விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (வ-13)

# இந்து சமயத்தின் மீது பற்றுள்ளவர் மஹிந்த

*கூறுகிறார் கருணா*

மட்டக்களப்பு,மார்ச்.1

பிரதமர் மஹிந்த ராஜபக்ச இந்து சமயத்தில் மிகுந்த பக்தி உள்ளவர். அதனால் தான் இந்து ஆலயங்களுக்கு நிதியுதவி வழங்கும் வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள் ளார் என்று பிரதமரின் மட்டக்களப்பு, அம்பாறை விசேட இணைப்புச் செயலாளர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) தெரிவித்தார்.

இந்துசமய கலாசார அலு வல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக, அம்பாறை மற்றும் காரைதீவு பகுதியில் உள்ள ஆறு ஆலயங்களுக்கு காசோலைகள் வழங்கும் நிகழ்வில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

தொன்று தொட்டு தமிழர்களுக்கென அடையாளமாக உள்ள ஒரேயொரு சொத்து ஆலயமாகும். இந்த ஆலயங்கள் தேவையான ஆவணங்களுடன் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டியது அவசியமாகும். இவைகள் இல்லாத காரணத்தால் பல ஆலயங்கள் நீதிமன்றில் காலத்தைக் கடத்துகின்றன. முதலில் நாம் ஒற்றுமைப்பட வேண்டும்.

இந்து சமயத்தில் மிகுந்த பக்தி பிரதமருக்கு உள்ளது. ஜனாதிபதியும் சாதகமாகவே உள்ளார். எனவே, நாம் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த வேண்டும். என்றார். (கு-இ)

# மந்த நிலையில் செயற்படும் கரைச்சிப் பிரதேச சபை

*அக்கராயன் மக்கள் விசனம்*

கிளிநொச்சி, மார்ச்.1

கரைச்சிப் பிரதேச சபைக்குட்பட்ட அக்கராயன் பிரதேசத்தில் பிரதேச சபையின் செயற்பாடுகள் ஆரோக்கியமற்றுள்ளன என அப் பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறித்த பிரதேசத்தில் கழிவகற்றல் முகாமைத்துவம் சரிவர இடம்பெறாமை, பொதுச் சந்தையில் இரவு நேரக் காவலாளி இல்லாமையால் விசமிகளால் சந்தைக் கட்டடத்துக்கு சேதம் விளைவிக்கப்படுகின்றமை மற்றும் பிரதேச சபையின் பொதுநூலகம் சனிக்கிழமையில் மதியத்துடனும் ஞாயிற்றுக் கிழமையில் முழுநேரமும் மூடப்படுதல் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் பிரதேசசபையின் அக்கராயன் வட்டார ஆளும் கட்சி உறுப்பினர் தயாபரனைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, கழிவகற்றல் முகாமைத்துவம் மற்றும் பொதுச் சந்தைக்கு காவலாளியை நியமித்தல் போன்றன தொடர்பில் சபை அமர்வுகளில் பல தடவைகள் கோரிக்கை விடுத்தேன். ஆனால் இது தொடர்பில் இன்று வரை காத்திரமான நடவடிக்கை எதையும் சபை மேற்கொள்ளவில்லை- என்றார். (வ-12)

# காணாமலாக்கப்பட்டோரை வைத்து கட்சி லாபம் தேடுகிறது த.தே.ம.மு.

*காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அமைப்பு குற்றச்சாட்டு*

கிளிநொச்சி, மார்ச்.1

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தமது சுய அரசியலுக்காக பாதிக்கப்பட்ட மக்களின் போராட்டங்களைச் சிதைத்து கட்சி லாபம் தேடி வருகின்றதென வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது. ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த செய்திக் குறிப்பிலேயே இந்த அமைப்பு இதனைத் தெரிவித்துள்ளது.

இந்தச் செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,

தமது அரசியலை நிமிர்த்துவதற்காக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டங்களைத் திசை திருப்பி அரசை திருப்திப்படுத்த முயல்கின்றனர்.

இந்த நிலையில் வடக்கு கிழக்கு மாகாண வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அமைப்பால் கிளிநொச்சியில் ஒழுங்குபடுத்தப்பட்ட மக்கள் போராட்டத்தை குழப்பும் வகையிலும், இலங்கை அரசை திருப்திப்படுத்தும் வகையிலும் தற்போது யாழில் குழப்பகரமான போராட்ட சூழலை உருவாக்க முயல்கின்றனர்.

போலியான அரசியல் தலைமைக்கு வாக்களித்தமையையிட்டு மக்கள் தலைகுனிய வேண்டிய நிலைக்கு அவர்களின் செயற்பாடு தற்போது காணப்படுகின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-6)

# மூன்று கோணங்களில் விசாரணை ஆரம்பம்

கிளிநொச்சி, மார்ச் 1

பளை இத்தாவில் பகுதியில் கொரோனாத் தொற்று அடையாளம் காணப்பட்ட நபருக்கு எவ்வாறு தொற்று ஏற்பட்டது என்பது தொடர்பாக சுகாதாரத் திணைக்களத்தினர் விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ள னர்.

கடந்த புதன்கிழமை இத்தாவில் பகுதியில் கொரோனாத் தொற்றாளர் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார். இவருக்கு மேற்கொள்ளப் பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் இவருக்கு எவ்வாறு தொற்று ஏற்பட்டது என்பது தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

புலோலிப் பகுதியில் இடம்பெற்ற கிறிஸ்தவ கூட்டமொன்றில் கலந்து கொண்ட ஒருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது. அதனால் அங்கு சென்றவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளபட்டது. அதில் கலந்துகொண்ட குறித்த நபருக்கு மட்டும் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இந்த நபர் வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் உள்ள விவசாயப் பயிற்சி கல்லூரி ஒன்றில் தொழில் புரிந்து வருகின்றார் எனவும் அங்கு வெளிக்கள உத்தியோகத்தராக இருப்பதால் வவுனியாப் பகுதியில் அண்மையில் பாதிக்கப்பட்ட தொற்றாளர்களால் பாதிக்க்பட்டிருப்பாரா அல்லது இந்த நபர் தனது தந்தையை கடந்த 2 வாரங்களாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைத்து பராமரித்து வந்துள்ளார்.

எனவே மருத்துவமனை ஊடாக தொற்று ஏற்பட்டிருக்கலாமா என்று மூன்று கோணங்களில் சுகாதாரத் துறையினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ற-6,9)

# அதிபர் மீது தாக்குதல்

ஹற்றன், மார்ச் 1

ஹற்றன் பொகவந்தலாவ, டின்சின் தமிழ் மகா வித்தியாலய அதிபர் மீது, நான்கு பேர் கொண்ட குழு தாக்குதல் நடத்தியுள்ளது.

தாக்குதலுக்குள்ளான அதிபர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம், நேற்று முன்தினம் இரவு நடந்துள்ளது. பொகவந்தலாவ பொலிஸ் நிலையத்தில் சம்பவம் தொடர்பில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (க-இ)

# பள்ளிக்குடாக் கடலில் வலைகள் திருட்டு!

*மீனவர்கள் கவலை*

பூநகரி,மார்ச் 1

பூநகரி - பள்ளிக்குடாக் கடலில் தொழிலில் ஈடுபடும் மீனவர்களின் வலைகள் திருடப்படுவது அண்மைக்காலமாக அதிகரித்துவருகின்றதென அந்தப் பகுதி மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது,

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் தங்கூசி வலை மூலம் தொழில் செய்வது தடையெனக்கூறி எமது தங்கூசி வலைகளை கடற்படையினர் கையகப் படுத்தினர். அதன்பின்னர் பெரும் கஷ்ட நிலையின் மத்தியில் நூல்வலைகள் வாங்கி தொழிலில் ஈடுபட்டோம்.

தற்போது எமது கடற்பரப்பில் கூடுதலாக கணவாய் பிடிபடும் காலமென்பதால் கடன்பட்டு வலைகளைக் கொள்வனவு செய்து தொழிலில் ஈடுபட்டுள்ள நிலையில், எமது வலைகள் கடற்பகுதியில் வைத்து திருடப்படுகின்றன. நேற்றுமுன்தினம் கூட மாற்றுவலுவுள்ள தொழிலாளர் ஒருவரின் பெறுமதிமிக்க வலைகள் திருடப்பட்டுள்ளன- என்றனர். (ற-12)

# சோதனை என்கின்ற பெயரில் பொருள்கள் அபகரிக்கும் ராணுவம்!

## தடுத்து நிறுத்துமாறு பலதரப்பிடமும் கோரிக்கை

**கொழும்பு, மார்ச் 1**

**மன்னார் மாவட்டத்திலுள்ள சில சோதனைச் சாவடிகளில் சோதனை என்கின்ற பெயரில் பொருள்கள் பலவற்றை ராணுவத்தினர் தொடர்ச்சியாக அபகரிக்கின்றனர் என்று பாதிக்கப்பட்ட தரப்பினர் விசனம் தெரிவிக்கின்றனர்.**

வர்த்தகர்கள் வாகனங்களில் பொருள்களை மன்னாருக்கு ஏற்றிச் செல்கின்றனர். அத்தகைய வாகனங்களை இடைமறிக்கும் இராணுவத்தினர், சோதனை என்றுகூறி தங்களுக்குத் தேவையான பொருள்களை வாகனத்திலிருந்து எடுத்து கொள்கின்றனர். இதனால் தாங்கள் பாதிக்கப்படுகின்றோம் என்று வெளி மாவட்டங்களிலிருந்து விற்பனைக்காக வருபவர்களும் விற்பனைக்காக செல்பவர்களும் குற்றம் சுமத்தி விசனம் தெரிவிக்கின்றனர்.

மன்னார் பிரதான பாலப்பகுதியிலும் வங்காலை, குஞ்சுக்குளம் பகுதியிலும் உள்ள சில சோதனை சாவடிகளில் மேற்படி சம்பவம் நிகழ்கின்றது. தங்களால் எதுவும் செய்ய முடியாத நிலையில் ராணுவத்தினர் எடுக்கும் பொருள்களை விருப்பமின்றி அவர்களிடமே கொடுத்து விட்டு வரவேண்டியுள்ளது என்றும் அதனால் தங்களின் வியாபார இலாபம் குறைவடைகின்றது என்றும் விற்பனையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக யாரை சந்திப்பது எவ்வாறு இந்த செயற்பாட்டை தடுப்பது என்றுகூட எங்களுக்குத் தெரியவில்லை. எனவே மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவர், மாவட்ட செயலர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த விடயத்தில் தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பாதிக்கப்பட்ட சிறுதொழில் விற்பனை முகவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (த-இ)

# நகைக்கடை திருட்டு; 8ஆவது நபரும் கைது

### படகில் வந்து திருடினர் என்கின்றது பொலிஸ்

திருகோணமலை, மார்ச் 1

திருகோணமலை நகரில், நகைக் கடை ஒன்றில் 38 லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் திருடப்பட்டுள்ளமை தொடர்பில் 8ஆவது சந்தேகநபரும் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 8 ஆம் திகதி தங்க நகைகள் திருடப்பட்டுள்ளன. இதுவரையான விசாரணைகளின்படி, திருகோணமலை - கோணேஸ்வரம் கடற்கரை பகுதியில் படகு ஒன்றில் வந்திறங்கிய நபர்கள் தங்க நகைகளை திருடி மீண்டும் படகிலேயே தப்பிச் சென்றுள்ளனர் என்று தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய ஏழு பேரை ஏற்கனவே பொலிஸார் கைதுசெய்து தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்டு வரும் நிலையில், திருகோணமலையில் பல கொள்ளை சம்பவங்களுடன் தொடர்புடையவரான 8ஆவது நபரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவர், திருகோணமலை நான்காம் கட்டை பகுதியைச் சேர்ந்த 39 வயதுடையவராவார். (த-இ)

# கடனுக்கு சிகரெட் வழங்காததால் வர்த்தகர் மீது கத்திக் குத்து

கொழும்பு, மார்ச்.1

கடனுக்கு சிகரெட் வழங்க மறுத்ததால் கோபமடைந்த நபர் ஒருவர், வர்த்தகரை கூர்மையான ஆயுதம் ஒன்றால் குத்திய சம்பம் தலவாக்கலையில் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் பொலிஸார் மேலும் தெரிவித்ததாவது;

போதையில் வந்த நபர் கடை ஒன்றுக்குள் சென்று கடனுக்கு சிகரெட் வழங்குமாறு கேட்டுள்ளார். எனினும் கடனுக்கு வழங்க முடியாதென கடை உரிமையாளர் கூறியுள்ளார். இதனால் கோபமடைந்த நபர் கூர்மையான ஆயுதம் ஒன்றால் வர்த்தகரைக் குத்தியுள்ளார். மேலும் வர்த்தகரின் 60 ஆயிரம் பெறுமதியான கையடக்கத் தொலைபேசிக்கும் சேதம் ஏற்படுத்தியுள்ளார்.

காயமடைந்த வர்த்தகர் நுவரெலியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ப)

# க.பொ.த. சா/த பரீட்சைக்கு 'சிசு செரிய' பஸ் கட்டாயம்!

### தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவிப்பு

கொழும்பு, மார்ச்1

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை இடம்பெறும் காலப்பகுதியில், சிசு செரிய பஸ் சேவையின் கீழ் முன்னெடுக்கப்படும் அனைத்து பஸ் சேவைகளும் சேவையில் ஈடுபடுத்தப்படுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது என தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் நிலான் மிரண்டா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

இன்று முதல் 11 ஆம் திகதி வரை இந்த பஸ் சேவை கட்டாயமாக்கப்பட்டுள்ளது. சிசு செரிய பஸ்கள் சேவையில் ஈடுபடும் சந்தர்ப்பங்களில் பிற பயணிகளை பஸ்ஸில் ஏற்றக்கூடாது. ஆயினும், தவிர்க்க முடியாத காரணங்களால் மட்டும் மாணவர் ஒருவரின் பெற்றோர் தமது பிள்ளைகளுடன் பாடசாலைக்குச் செல்ல அனுமதி வழங்கப்படும். சுகாதார வழிகாட்டல்களுக்கமைவாக மாணவர்கள் போக்குவரத்தில் ஈடுபட வேண்டும் என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது - என்றார். (ந-இ)

# தாயகம் திரும்புவோருக்கு 100 தனிமை நிலையங்கள்

கொழும்பு,மார்ச் 1

வெளிநாடுகளில் இருந்து தாயகம் திரும்பும், இலங்கைத் தொழிலாளர்களை தனிமைப்படுத்துவதற்காக விசேட தனிமைப்படுத்தல் நிலையங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் அவ்வாறான 100 க்கும் அதிகமான தனிமை நிலையங்கள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் செயலாளர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

ஹோட்டல்கள், அரச நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் இவ்வாறு தனிமைப்படுத்தல் நிலையங்களாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. இவை தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்கு உகந்தவையா என்பது தொடர்பான தகவல்கள் கொவிட் 19 ஒழிப்பு தேசிய செயலணியின் தலைவருக்கும் கையளிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தீர்மானிக்கப்பட்டதன் பின்னர் அனுமதியளிக்கப்பட்ட இடங்களைத் தனிமைப்படுத்தல் நிலையங்களாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (க-இ)



# எரிப்பதா ? புதைப்பதா? காத்திருக்கிறது ஜனாஸா

கொழும்பு, மார்ச் 1

கொரோனாவால் உயிரிழந்த முஸ்லிம் ஒருவரின் உடலை தகனம் செய்வதற்கு குருநாகல் மருத்துவமனை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தவேளை, அமைச்சர் ஒருவர், அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு அந்த நடவடிக்கையைத் தடுத்து நிறுத்தியுள்ளார். அதனால் உடல் தற்போது பிரேதஅறையில் வைக்கப்பட்டுள்ளது என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் அலிஜாஹிர் மௌலானா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தனது ருவிற்றர் பதிவில் குறிப்பிட்டுள்ளதாவது:

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தவர்களின் உடல்களை அடக்கம்செய்வதற்கு அனுமதிக்கும் வர்த்தமானி அறிவித்தல் வெளியான பின்னர், முஸ்லிம் ஒருவர் சில நாள்களுக்கு முன்னர் இறந்துள்ளார்.

அவரின் உடலை தகனம் செய்வதற்கான நடவடிக்கைகளை அவர்கள் ஆரம்பித்தனர். எனினும், உரிய வழிகாட்டுதல்கள் வரும்வரை வர்த்தமானி அறிவித்தலை பின்பற்றுமாறும் அதுவரை சடலத்தை மருத்துவமனையின் பிரேத அறையில் வைத்திருக்குமாறும் மருத்துவமனையின் பணிப்பாளரிடம் வலியுறுத்தினேன். எனினும், பிரேத அறையில் இடமில்லாததால் உடலை பாதுகாத்து வைத்திருப்பது கடினமான விடயம் என்று பணிப்பாளர் தெரிவித்தார்.

இதன் பின்னர் நான் பதில் சுகாதார அமைச்சர் ஜயசுமனவை தொடர்புகொண்டேன். அவர் எனக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கினார். இது தொடர்பில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துடன் பேசினேன். நடவடிக்கை மேற்கொள்கிறேன் என அவர் தெரிவித்தார். கொவிட் 19 தடுப்பு தொடர்பான இராஜாங்க அமைச்சரின் செயலாளரும் எனக்கு ஒத்துழைப்பு வழங்கினார். உரிய வழிகாட்டுதல்கள் வரும்வரை உடலைப் பிரேத அறையில் வைத்திருக்குமாறு குருநாகல் மருத்துவமனையின் இயக்குநருக்குத் தெரிவித்துள்ளார். (த-இ)

# குடிதண்ணீர் வர்த்தகர்களிடம் கூடுதல் வரிவிதிக்கத் திட்டம்

கொழும்பு, மார்ச் 1

குடிதண்ணீர் வியாபாரத்தில் ஈடுபடும் வர்த்தகர்களிடம் இருந்து கூடுதலான வரியைப் பெறுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

கண்டியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

குடிதண்ணீர்ப் போத்தல்களை விநியோகிக்கும் வர்த்தகர்கள் மிகப்பெருமளவில் இலாபங்களைப் பெறுகின்றனர். ஆனால் அரசுக்கு குறைந்தளவு வரியே செலுத்துகின்றனர்.

உதாரணமாக ஒரு லீற்றர் தண்ணீர்ப் போத்தலுக்கு வெறும் 5 சதம் மட்டுமே அரசுக்கு வரியாகச் செலுத்துகின்றனர்.

இந்தத் துறை தற்போது ஏற்றுமதி வரையும் வளர்ச்சியடைந்துள்ளது.

எனவே குறித்த வரி விதிப்பில் மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும் என்றார். (ம)

## இன்றைய நாள்

**மேடம்**: சோதனை வந்தாலும் அமைதியை கடைப்பிடித்து வெல்வீர்கள். குழந்தைகளிடம் அனுசரித்து அவர்களின் பிரியத்தைப் பெறுவீர்கள். ஊக்கம் அளிப்பீர்கள்.

**இடபம்**: கடன் சுமை குறையும். நட்பால் நல்ல விஷயம் நடக்கும் குடும்பத்தில் சுபநிகழ்ச்சி ஒன்றுக்கான ஏற்பாடு செய்யப்படும். மன நிறைவளிக்கும் தகவல் ஒன்றைப் பெறுவீர்கள்.

**மிதுனம்**: முன்பு உங்களுடன் பழகிய சிலரை சந்தித்து மகிழ்வீர்கள். சாப்பிடவும் தூங்கவும் நேரம் இல்லாமல் வேலை இருக்கும். உங்கள் முன்னேற்றத்திற்கு உதவியவருக்கு உதவுவீர்கள்.

**கடகம்**: வாழ்க்கைத் துணையின் செயலால் சிறிது ஏமாற்றம் அடைவீர்கள். முயற்சிகளில் சுமாரான வெற்றி உண்டாகும். கல கலப்பான நாள். தாழ்வு மனப்பான்மை தலைதூக்க விடாமல் இருங்கள்.

**சிம்மம்**: புதிய விடயங்களைக் கற்பீர்கள். அதிகமாக உழைப்பீர்கள். சில விடயங்களை தீர்மானிக்க முடியாதபடி குழப்பம் வரும். மதிக்க வேண்டியவர்களைப் பகைத்துக் கொள்ள வேண்டாம்.

**கன்னி**: புண்ணியம் செய்யும் எண்ணம் வரும். சுகம் உண்டு. முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பணப் பற்றாக்குறை தீரும். வருங்கால முன்னேற்றம் தொடர்பில் செய்த முயற்சி பலிக்கும்.

**துலாம்**: சிறு வெற்றிகள் மகிழ்ச்சி தரும். அவசரத் தீர்மானம் ஆபத்தை ஏற்படுத்தும் என்பது நினை விருக்கட்டும். நாகரிகமாகச் செயல்பட்டு பிறரின் மதிப்பை பெறுவீர்கள்.

**விருச்சிகம்**: உங்கள் மீது உங்களுக்கே மதிப்பு ஏற்படும் விஷயம் நடக்கும். கடந்த சில நாள்களாக மனதிலிருந்த குழப்பம் அகலும். தீர்மானங்களை தைரியமாக எடுத்து வெற்றிக்கு வழிகாண்பீர்கள்.

**தனுசு**: திருமணம் ஆகாதவர்களுக்கு விரைவில் கெட்டி மேளம் கொட்டும். குழந்தை இல்லாதவர்களுக்கு இனி அந்த குறை இல்லை. பயம் நீங்கும். சிறிய பிரச்னை பொறுப்பை கூடுதலாக்கும்.


**மகரம்**: பலருடன் சேர்ந்து மகிழ்ச்சியாகப் பொழுது கழியும். புதிய விஷயம் கற்கும் சிந்தனை மேலோங்கும். சில நண்பர்களின் சுயரூபம் தெரிந்து மனம் வருத்தப்படும்.

**கும்பம்**: சந்தேகம் கொண்டு யாரையும் கேள்வி கேட்க வேண்டாம். முகம் தெரியாதவர்களை நம்பி எதையும் வெளியிட வேண்டாம். பொறுமையைக் கடைப்பிடித்து நன்மை காண்பீர்கள்.

**மீனம்**: திடீர் செலவுகளைச் சமாளிக்க வழிகளை கண்டுபிடிப்பீர்கள். தகுந்த ஓய்வு பெற்று உடல் நலத்தை சீராக்கிக் கொள்வீர்கள். முன்பு உழைத்ததற்கு இப்போது நல்ல பலன் கிடைத்து மகிழ்வீர்கள்.

# வாழ்தல் என்பது போராட்டம் தான்!

■ ச.சீதா



இளமைப் பருவத்தை நம் மூத்தோர்கள், 'ஓடுகின்ற பாம்பைக் கையில் பிடிக்கின்ற பருவம்' என்று வர்ணித்திருக்கிறார்கள். 'இளங்கன்று பயமறியாது' 'இன்றைய இளையவர்கள் நாளைய தலைவர்கள்', என்றெல்லாம் நாம் பலர் சொல்லக் கேட்டிருக்கிறோம். ஆனால், இன்றைய நிலைமையைப் பார்க்கும்போது, நாம் கற்றுணர்ந்தவை எல்லாம் உண்மையா இல்லையா என்ற ஐயம் நம் மனத்தில் பெருக்கெடுத்து ஓடுகின்றது. இன்று மூத்தோரிடம் காணப்படும் கடின உழைப்பும் தன்னம்பிக்கையும் இளையோர்களிடத்தில் இல்லை!. 'அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது.

அதனினும் கூன், குருடு, செவிடு நீங்கி பிறத்தல்' என்றார் ஔவை மூதாட்டி. எந்தக் குறையுமின்றி இந்த அரிய பிறப்பைப் பெற்றிருக்கும் இளைஞர்களிடம் இளமைப் பருவத்தில் தன்னம்பிக்கையும் கடின உழைப்பும் குறைந்து காணப்படுவது வருத்தத்துக்கு உரியதாக உள்ளது.

இன்றைய சூழலில் அறிவியல் ஞானமும், அதனால் விளைந்த தொழில் நுட்பங்களும், நாகரீக வளர்ச்சியும் வாழ்க்கை முன்னற்றத்துக்குத் தேவையான அத்துணை வசதிகளையும் பல்வேறு பரிமாணங்களில் வழங்கிக் கொண்டிருக்கின்றன. இவை மட்டும் ஒருவனுக்கு வெற்றியைத் தந்துவிடாது. கடின உழைப்பும், தன்னம்பிக்கையும் மேற்கூறியவற்றோடு ஒன்றிணைந்தால்தான் அவன் வெற்றியடைய முடியும். ஆனால், இன்றைய இளையோர்களோ, வெற்றிக்காகப் போட்டி போட்டுக் கொண்டிருக்கும் பலரோடு விடாமுயற்சியுடனும் தன்னம்பிக்கையுடனும் போராடாமல், 'எப்படியும் தோற்கத்தான் போகிறோம்' என்று சோர்வடைகிறார்களே தவிர வெற்றியை அடையக் கடினமாக உழைப்பதில் நாட்டம் காட்டுவதில்லை.

வாழ்க்கை என்பது வெறும் ரோஜா மலர்களால் ஆன பாதையல்ல. முட்செடிகளும் நிறைந்தது. குயில்களின் இனிய கூவல்கள் மட்டுமல்ல. கோட்டான்களின் அலறல்களும் நிறைந்தது. சிங்கத்தின் கர்ஜனை மட்டுமல்ல. ஓநாய்களின் ஊளையும் நிறைந்தது. வெற்றிகள் மட்டுமல்ல தோல்விகளும் நிறைந்தது. இது இன்றைய இளைஞர்களுக்குப் புரிவதில்லை.

ஒருமுறை தோல்வியைச் சந்தித்துவிட்டால் துவண்டு விடுகிறார்கள். மீண்டும் முயற்சித்தால் தோல்விதான் மிஞ்சும் என்று தங்களுக்குத் தாங்களே சித்தாந்தம் பாடிக் கொள்கிறார்கள். விளைவு? அவர்கள் விழுந்த இடத்திலேயே கிடக்கிறார்கள். தோல்விகள் அவர்களைக் கொடுங்கனலாய்த் தகித்துக் கொண்டேயிருக்கின்றன. அவர்கள் அடையும் ஒவ்வொரு தோல்வியும், அவர்களது வெற்றிக்கு அவர்களே நாட்டிக் கொள்ளும் படிக்கட்டுகள் என்பதை அவர்கள் உய்த்துணர்ந்தால்தான், தோல்வியிலிருந்து மீண்டு 'நம்மால் முடியும்' என்ற தன்னம்பிக்கையைப் பெறமுடியும்.

கல்வி கற்கும் போது, சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தாலும் நாள்கள் செல்லச்செல்ல பலரிடம் அது காணாமல் போய்விடுகிறது. அவர்கள் சாதிக்க விரும்பியதை, சிந்தைக்குள் புகுத்தி, மனத்தில் இருத்தி, அதை அடையத் தேவையான முயற்சியையும் உழைப்பையும் மூலதானமாகப்போட வேண்டும். 'கடலலை, கரையைத் தன்னுள் விழுங்கிவிட வேண்டும் என்று எண்ணுவதால்தான் அது ஓயாமல் கரையை நோக்கி வந்துகொண்டிருக்கிறது. தன்னால் முடியவில்லை என்று அது விடவில்லை! அதைப் போல இன்றைய இளைஞனும் தான் சாதிக்க எண்ணியதை அடைய, விடாது முயற்சிசெய்ய வேண்டும். நினைத்ததை அடைய, கடலலை குமுறுவதைப் போல், இளையவர்களும் தங்களுக்குள் குமுறிக் கொண்டே இருக்க வேண்டும். அப்போதுதான் அவர்களுக்குள் தன்னம்பிக்கை பிறக்கும். நினைத்ததைச் சாதிக்க முடியும் !




## பார்வைகள் நேர்மறையாகட்டும்

பார்வைகள் பலவிதம். கறுப்புக் கண்ணாடி அணிந்த ஒருவருக்குப் பார்ப்பது எல்லாம் கண்ணாடியின் நிறத்தையே காட்டும். எண்ணங்கள் தீயவையாகவோ நல்லவையாகவோ இருப்பதற்குக் காரணம் நம் "பார்வைகள்". பார்வையில் குறைபாடு இருக்கும்போது பார்க்கப்படும் காட்சிகளும் பிழையாகத்தான் தோன்றும். எமது அழகு தமிழில் அதைக் கண்ணோட்டம் என்பர்.

கண்ணோட்டம் எதிர்மறையாக இருக்கும்போது பார்ப்பவர் அனைவரும் எதிரிகளாகத் தெரிவர். நேர்மறையாக இருந்தால் எதிரிகளில் கூட நல்லவற்றை ரசிக்கும் மனநிலை வெளிப்படும். இதனையே இயேசு உன் கண்ணில் இருக்கும் மரக்கட்டையை எடுத்து எறிந்தால் அடுத்தவரிடம் இருக்கும் துரும்பு பெரிதாக உறுத்தாது என்கிறார். தன் அகத்தை தூய்மையாக்கி பிறர் தவறைச் சுட்டும் பண்பை உருவாக்குவோம். இந்தத் தவக்காலத்தில் எமது கடந்தகால வாழ்வை மீழாய்வு செய்து குப்பைகளையும் தூசிகளையும் துடைத்தெறிவோம். பிறரை விமர்சிப்பதைத் தவிர்ப்போம்.

நேர்மறைக் கண்ணோட்டத்தில் இருப்போரின் மனநிலையும் அதிலிருந்து வெளிப்படும் நேர்மறை எண்ணங்களும் பாலைவனத்திலும் பழமரங்களை உருவாக்கும் சக்தி கொண்டவை. அந்த நேர்மறை எண்ணங்களால் நாம் வாழ்வு பெறுவோம். பார்வைகள் நேர்மறையானால் பாதைகள் சீர்பெற்று விளங்கும்.

**எஸ்.யேசுதாஸ்**
கொழும்புத்துறை





# துப்புரவாகின்றது வங்காலை குளம்

மன்னார், மார்ச் 1
மன்னார் வங்காலை குளம் நேற்றுமுன்தினம் துப்புரவு செய்யப்பட்டது. மன்னார் மாவட்ட கமநல உதவி ஆணையாளர் ஏ.மெரின் குமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், மன்னார் மாவட்டச் செயலர் திருமதி ஸ்டான்லி டி மெல் துப்புரவுப் பணியை ஆரம்பித்து வைத்தார். வங்காலை ஆலங்குளம் கமக்காரர் அமைப்பினர், நானாட்டான் பிரதேச செயலகத்தின் உதவி பிரதேச செய லர், கிராம அலுவலர்கள், சமுர்த்தி அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்தனர். (து-213)

# யாழ்ப்பாணப் பல்கலையில் 4,000 சிங்கள மாணவர்கள்

## நல்லிணக்கத்துக்கு சிறந்த உதாரணம் என்கிறார் இராஜாங்க அமைச்சர் கப்ரால்

**யாழ்ப்பாணம், மார்ச் 1**
**யாழ். பல்கலைக்கழகத்தில் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிங்கள மாணவர்கள் கல்வி பயில்வதே நல்லிணக்கத்துக்கான எடுத்துக்காட்டு என நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.**

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 46ஆவது கூட்டத் தொடர் நடைபெற்றுவரும் நிலையில் இந்த விடயம் தொடர்பாக வெளியிட்டுள்ள ருவிற்றர் பதிவிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 12 ஆயிரம் மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். அவர்களில் 4 ஆயிரத்தும் மேற்பட்டவர்கள் சிங்கள மாணவர்கள். இது நல்லிணக்கத்துக்கான ஒரு சிறந்த எடுத்துக்காட்டு என்றவாறாக அந்தப் பதிவு அமைந்துள்ளது. (ம-ப)

# இந்தியாவைப் பகைத்தால் இலங்கைக்குப் பேராபத்து!

## எச்சரிக்கிறார் சந்திரிகா

கொழும்பு, மார்ச் 1
சீனாவை மடியில் வைத்துக்கொண்டு, பாகிஸ்தானை அரவணைத்துக்கொண்டு இந்தியாவைப் பகைப்பதால் எதையோ சாதிக்க முடியும் என்று இலங்கை கனவு காண்கின்றது இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது,
ராஜபக்ச அரசின் கனவு நரகலோகக் கனவாகவே இருக்கும். இவ்வாறான செயற்பாடுகளால் எந்தவித நன்மைகளையும் இலங்கை அடையமாட்டாது. மிகவும் அயல் நாடான இந்தியாவைப் பகைப்பதால் பெரும் விளைவுகளைத்தான் இலங்கை சந்திக்கும் என்பதை இந்த அரசிடம் கூறிவைக்க விரும்புகின்றேன்.
ஒரு நாட்டைப் பகைத்துவிட்டு மற்றைய நாட்டை மடியில் தூக்கி வைத்துக் கொண்டாடுவதில் எந்த இலாபமும் கிடைக்காது. எமது நாடுதான் அடகுவைக்கப்படும். ஏற்கனவே இலங்கையைச் சீனா ஆக்கிரமித்து நாட்டை நாசமாக்கி வருகின்றது. அந்தளவுக்கு இந்த அரசு இடம் கொடுத்துவிட்டது என்றார். (ம-ஒ,5,22)

# யாழ். விமான நிலைய அபிவிருத்தி இந்தியக் குழு இம்மாதம் ஆராய்வு

யாழ்ப்பாணம், மார்ச் 1
யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் இரண்டாம் கட்ட அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பது குறித்து ஆராய இந்திய நிபுணர்கள் குழு இம்மாதம் முதல் வாரத்தில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளது.
யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையத்தின் இரண்டாம் கட்ட அபிவிருத்திப் பணிக்கு இந்திய அரசு நிதி வழங்கவுள்ளது. இந்த அபிவிருத்திப் பணிகளின்போது, பயணிகளின் வசதிகளை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தி, யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையத்தின் ஓடுபாதையை அகலப்படுத்துவது உட்பட ஏழு முக்கிய திட்டங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.
கொரோனா அச்சுறுத்தலுக்குப் பின்னர் நாட்டின் பிற விமான நிலையங்கள் சர்வதேச அளவில் இயங்கி வந்தாலும், யாழ்ப்பாணச் சர்வதேச விமான நிலையம் இன்னமும் செயற்பட ஆரம்பிக்கவில்லை.
இரண்டாம் கட்ட அபிவிருத்திப் பணிக்கான நிதியை இந்தியா வழங்கத் தயாராக இருந்த போதும், இலங்கை அதில் அக்கறை காட்டவில்லையென இராஜதந்திர வட்டாரங்களில் தகவல் வெளியாகியிருந்தது.
எனினும், அண்மைக்காலத்தில் இந்தியா மேற்கொண்ட சில அழுத்தங்கள் காரணமாக, யாழ்ப்பாணம் பலாலி விமான நிலைய அபிவிருத்திப் பணிகள் மீள ஆரம்பிக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (ப)

# மரணச் சடங்குக்கு சென்றோர் கிராம அலுவலரிடம் பதியுங்கள்!

கொடிகாமம், மார்ச்1
பளை இத்தாவில் பகுதியில் கடந்த 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற மரணச் சடங்கில் கலந்து கொண்ட அனைவரையும் தங்களுடைய கிராம அலுவலரிடம் பதிவுகளை மேற்கொள்ளுமாறு, அவர்களை சுய தனிமைப்படுத்தலில் ஈடுபடுமாறும் பிரதேச சுகாதாரத் திணைக்களத்தினர் அறிவுறுத்தல் வழங்கியுள்ளனர்.
இந்த இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட ஒருவருக்கு கொவிட்19 தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில் சுகாதாரத் திணைக்களத்தினர் இந்த அறிவித்தலை விடுத்துள்ளனர். (ற-159)



# வடக்கில் அவ்வப்போது மிதவேகமான காற்று!

யாழ்ப்பாணம், மார்ச் 1
வடக்கு, வடமத்திய, வடமேல் மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலும் மத்திய மலைநாட்டின் கிழக்கு சரிவுப் பகுதிகளிலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.
இது தொடர்பில் அந்தத் திணைக்களம் விடுத்த அறிவிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:
சப்ரகமுவ மாகாணத்திலும் களுத்துறை, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் பி.ப. 2 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பிரதானமாக சீரான வானிலை நிலவும் என எதிர்பார்க்கப்படுகின்றது- என்றுள்ளது. (ம)

# சுகாதார பரிசோதகர் மீண்டும் கடமைக்கு

கொழும்பு,மார்ச் 1
கம்பஹா மாவட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தங்களது பணிகளை மீண்டும் ஆரம்பித்துள்ளனர் என்று கம்பஹா மாவட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் சமிந்த சமரதிவாகர தெரிவித்துள்ளார்.
பரிசோதகர்கள் விடுத்த கோரிக்கைகளுக்கு, சுகாதார அதிகாரிகள் எழுத்து பூர்வமாகத் தீர்வு வழங்கியமையை அடுத்து, அவர்கள் தமது பணிப்பகிஷ்கரிப்பைக் கைவிடத் தீர்மானித்த னர்.
தற்போது கொரோனாத் தடுப்பூசி செலுத்தும் பணிகளை மீண்டும் ஆரம்பித்துள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

# யாழ்.மாவட்டத்தின் தற்போதைய நிலைமை மிகவும் அபாயகரமானது

## யாழ்ப்பாண மாவட்டச் செயலர் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 1
பொதுமக்கள் தற்போதைய நிலையில் மிக மிக அவதானமாக இருப்பது முக்கியம். முதலில் வெளி மாவட்டத்திலிருந்து வருவோரால் மாத்திரமே தொற்றுப் பரவுகிறது என்று கருதப்பட்டது. எனினும் தற்போது யாழ் மாவட்டத்தில் உள்ளோரால் தொற்று உறுதிசெய்யப்படுகின்ற நிலையானது மிகவும் அபாயகரமானதாகக் காணப்படுகின்றது என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலர் க. மகேசன் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்;
249 பொதுமக்களுக்கும் 51 சிறைக் கைதிகளுக்குமாக மொத்தம் 300 பேருக்கு யாழ்ப்பாண மாவட்டத்தில் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள நிலைமை காணப்படுகின்றது. இந்த நிலையில் 513 குடும்பங்களைச் சேர்ந்த 987பேர் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள்.
எனினும் பொதுமக்கள் அலட்சியமான



மனப்பாங்குடன் அதனை அணுகுவதை நாங்கள் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. எனவே சமூக இடைவெளி மற்றும் சுகாதார நடைமுறைகளைக் கட்டாயமாக பின்பற்றுவதன் மூலமே யாழ்ப்பாண மாவட்டத்தில் தொற்றுக்குள்ளாவோரின் எண்ணிக்கையை கட்டுப்படுத்த முடியும். யாழ்ப்பாண மாவட்டத்தில் தடுப்பூசி வழங்கப்படும் வரை மிகவும் மக்கள் அவதானமாகச் செயற்பட வேண்டியுள்ளது என்றார். (ப)

# அம்பாந்தோட்டை துறைமுகத்தை கையகப்படுத்த முனைகிறது சீனா?

## அரசின் ஒப்பந்தத்தால் வந்தது வினை



**கொழும்பு,மார்ச் 1**

**முன்னாள் அரசு இழைத்த தவறு காரணமாக 99 வருடங்கள் சீனாவுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்ட அம்பாந்தோட்டை துறைமுக ஒப்பந்தம், 198 வருடங்களுக்கு நீடிக்கக் கூடும் என்று இலங்கை வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவை மேற்கோள்காட்டி சீன ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

சீனாவிடம் பெற்ற கடனை திருப்பிச் செலுத்துவதற்கு வழியின்றி முன்னைய 'நல்லாட்சி' அரசு, ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு 99 வருடங்கள் குத்தகைக்கு வழங்கும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது.

2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ஜனாதிபதியாகப் பதவியேற்ற கோத்தாபய ராஜபக்ச தாம் ஆட்சிக்கு வந்து சில நாள்களில், அம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பான ஒப்பந்தம் மீள் பார்வைக்குட்படுத்தப்படும் என்று அறிவித்தார். சீனத் தரப்பினர் வெளிப்படுத்திய எதிர்ப்பை அடுத்து, ஒப்பந்தத்தை மீள்பார்வைக்குட்படுத்தும் திட்டமில்லை என்று சில நாள்களிலேயே அவர் கூறியிருந்தார்.

இருந்த போதும் ஊடகமொன்றுக்கு வழங்கியிருந்த நேர்காணலில் ஜனாதிபதி ஹம்பாந்தோட்டை துறைமுக ஒப்பந்தத்தை மீள்பார்வைக்குட்படுத்தவுள்ளார் என்று துறைமுக அதிகார சபையின் தலைவர் ஜெனரல் தயா ரத்னாயக்க தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டிருந்த வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன "முன்னைய அரசு அம்பாந்தோட்டை ஒப்பந்தத்தை இரத்துச் செய்தபின்னர் கடனைக் கட்டவழியின்றி மீண்டும் சீனாவுடன் ஒப்பந்தம் செய்து கொண்ட போது, 99 வருடங்கள் நீண்ட கால குத்தகைக்கு வழங்கியது மட்டுமன்றி, அந்தத் தவணை முடிந்தவுடன் மேலும் 99 வருடங்களுக்கு குத்தகையைப் புதுப்பிக்கக்கூடியவாறான சரத்தையும் ஒப்பந்தத்தில் உள்ளடக்கியுள்ளது என்று அண்மையில் குறிப்பி[illegible]ள்ளார்.

இதனிடையே அம்பாந்தோட்டை [illegible]ந்தம் மீள்பார்வைக்குட்படுத்தப்பட[illegible]ள தான செய்திகளை சீனா மறுத்துள்[illegible]து. இருநாடுகளுக்கும் இடையே [illegible]ம் பெற்ற சமநிலையான தன்[illegible]வ பேச்சுக்களின் விளைவாகவே [illegible]த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது [illegible]று சீன வெளிவிவகார அமைச்சின் [illegible]ச் சாளர் வாங் வென்பின் தெரிவி[illegible]ள்ளார். ([illegible]இ)

## இலங்கையின் நில அதிர்வுகள்; சர்வதேச நிபுணர்கள் ஆய்வு

கொழும்பு, மார்ச் 1

இலங்கையின் சில பகுதிகளில் அண்மையில் பதிவான நில அதிர்வுகள் தொடர்பில் சர்வதேச புவியிலாளர்சார் நிபுணர்களுடன் ஆய்வுகள் ஆரம் பிக்கப்பட்டுள்ளன என புவிச் சரிதவியல் அளவை சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

அதன்படி, ஆஸ்திரே லியா மற்றும் கனடாவிலுள்ள நிபுணர்களு டன் தொலைக் காணொலி ஊடாக இது தொடர்பான கலந்துரையாடல்கள் இடம்பெறுகின்றன.

கண்டி - திகன மற்றும் பல்லேகல பகுதிகளிலும் லுணுகல - ஹெக்கிரிய பகுதி களிலும் கடந்த நாள்களில் நில அதிர்வுகள் பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது (வ-இ)

## 25 சதவீத நெல்லை அரசு கொள்வனவு செய்துள்ளது

கொழும்பு, மார்ச் 1

அரசின் நெல் கொள்வனவுத் திட்டத்தின் கீழ், இதுவரை 25 சதவீதம் வரையான நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது என்று நெல் சந்தைப் படுத்தல் சபையின் உபதலைவர் துமிந்த பிரியதர்ஷன தெரிவித்துள்ளார். எதிர்வரும் மார்ச் மாதம் அறுவடை அதிகரிக்கும் என்பதால் மேலும் கூடுதலான நெல்லை அரசு கொள்வனவு செய்ய முடியும் என்று தெரிவித்த அவர், நெல்லுக்கு உத்தரவாத விலை தீர்மானிக்கப் பட்டுள்ளதால் விவசாயிகளுக்கு, தமது அறுவடையை விற்பனை செய்வதற்கான சிறந்த சூழல் உருவாகியுள்ளது.



விவசாயிகளுக்கு நியாயமான தீர்வைப் பெற்றுக்கொடுப்பது அரசின் நோக்கம், அரசு நெல்லைக் கையிருப்பில் வைத்திருப்பதன் மூலம் நுகர்வோரைப் பாதுகாப்பதற்கும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (து-இ)

## ஜனாஸா அடக்கத்[illegible]கு அமெ., பாக். வரவே[illegible]பு!

கொழும்பு, மார்ச் 1

கொவிட் தொற்றால் உயிரி[illegible]வர்களை அடக்கம் செய்ய இ[illegible]க அரசு அனுமதியளித்து அ[illegible], உத்தியோகபூர்வமாக அ[illegible]த மையை அமெரிக்கா மற்றும் [illegible]ஸ்தான் நாடுகள் வரவேற்றுள்[illegible]. இந்த மாற்றம் உடனடியாகச் [illegible]ல் படுத்தப்படும் என நம்பு[illegible]ன் என்று அமெரிக்கத் து[illegible]வர் அலைனா ரெப்லிட்ஸ் தனது [illegible]விற்றரில் பதிவிட்டுள்ளார். [illegible]இ)

## 2 மாதங்களில் 3,142 பேருக்கு டெங்கு

கொழும்பு, மார்ச் 1

கடந்த ஜனவரி மற்றும் பெப்ரவரி ஆகிய இரண்டு மாதங்களில் இதுவரை 3ஆயிரத்து 142 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதன்படி, ஜனவரி மாதத்தில் ஆயிரத்து 483 பேரும் பெப்ரவரி மாதத்தில் ஆயிரத்து 658 பேரும் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என சுகாதார தரப்பு தெரிவித்துள்ளது. (ச-இ)

## மே தினக் கொண்டாட்டத்துக்கு தயாராகும் அரசியல் கட்சிகள்

கொழும்பு, மார்ச் 1

சுகாதார நடைமுறைகளின் பிரகாரம் இம்முறை மே தினக் கூட்டங்களையும், பேரணிகளையும் நடத்துவதற்கு பிரதான அரசியல் கட்சிகள் திட்டமிட்டுள்ளன. கொரோனா வைரஸ் பரவலால் கடந்த வருடம் மே தினக் கூட்டங்களையும், பேரணிகளையும் அரசியல் கட்சிகள் மற்றும் தொழிற்சங்கங்களால் முன்னெடுக்க முடியாமல் போனது. இதனால் சிறு அளவிலான நிகழ்வுகளே இடம்பெற்றன. இந்நிலையில்தான் இம்முறை மே தினத்தை உரிய வகையில் அனுஷ்டிப்பதென அரசியல் கட்சிகளின் தொழிற்சங்கப் பிரிவுகள் தீர்மா னித்துள்ளன.

இது தொடர்பில் சுகாதாரத் தரப்புக்களுக்கு அறிவித்து அனுமதி பெறுவதற்கான ஏற்பாடுகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. சமூக இடைவெளி உட்பட சுகா தார நடைமுறைகளைப் பின்பற்றி கூட்டம் நடத்து வதற்கு அனுமதி வழங்கப்பட்டாலும், பேரணிக்கு அனுமதி வழங்கப்படுமா என்பது கேள்விக்குறியே.

கொரோனா அச்சுறுத்தல் பகுதிகளில் எப்படியும் நிகழ்வுகளை நடத்த முடியாது. எனவே, பாதுகாப்பான பகுதிகளி லேயே கட்சிகளால் மே தின நிகழ்வு ஏற்பாடுகள் செய்ய வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-44)



58 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட நோனா கம வோடர்பார்க் நீரியல்வளப் பூங்கா, பிரதமர் மஹிந்த ராஜபக்சவால் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது. (க-இ)

## கடத்தல்காரரை பிடிக்க இன்டர்போலின் உதவி

கொழும்பு, மார்ச் 1

வெளிநாடுகளில் மறைந்திருக்கும் இலங்கையைச் சேர்ந்த போதைப்பொருள் கடத்தல்காரர்கள் 24 பேருக்கு எதிராக இன்டர்போல் என்ற சர்வதேச பொலிஸாரின் சிவப்பு அறிவித்தல் பெறப்பட்டுள்ளது என்று பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

சந்தேகத்துக்குரியவர்களில் பெரும்பாலானோர் துபாயிலும், ஐக்கிய அரபு இராச்சியத்திலும் சிலர் அண்டை நாடான இந்தியா மற்றும் ஐரோப்பிய நாடுகளிலும் தங்கியுள்ளனர் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. (ப)

# உலகெங்கும் உள்ள தமிழர்கள் அம்பிகைக்கு ஆதரவளியுங்கள்

## அழைக்கின்றார் சீமான்

**கொழும்பு, மார்ச் 1**

**பிரிட்டனில் வசிக்கும் புலம் பெயர்ந்த ஈழத் தமிழரான அம்பிகை தனியொருவராக முன்னெடுக்கும் அறப் போராட்டத்துக்கு உலகெங்கும் வாழும் தமிழர்கள் ஆதரவு கொடுத்து, இனத்துக்கான கோரிக்கைகள் வெல்லத் துணைநிற்க வேண்டும் என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் அழைப்பு விடுத்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

அந்த அம்பிகை, இலங்கையை இனப்படுகொலை குற்றத்திலிருந்து காப்பாற்றும் வகையில், ஆதரவான தீர்மானம் கொண்டுவருவதைப் பிரிட்டன் உள்ளிட்ட நாடுகள் கைவிட்டு, பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்தின் முன் இலங்கையை நிறுத்தி விசாரிக்கும் வகையில் தீர்மானம் கொண்டு வர வேண்டும் என்று வலியுறுத்தி, சாகும்வரை உணவு தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார் என்று அறிகிறேன். நீதிக்கான அவரது அறப் போராட்டம் வெல்ல வேண்டும்.

பத்து ஆண்டுகளுக்கும் மேலாக இனப்படுகொலைக்கு நீதி கேட்டுப் போராடும் தமிழினத்துக்கு துரோகம் புரியும் வகையில், ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் இனப்படுகொலை செய்த இலங்கையைக் காப்பாற்ற மீண்டும் உள்நாட்டிலேயே நீதி விசாரணையைச் செய்து கொள்ளலாம் என்று பிரிட்டன் தலைமையிலான உலக நாடுகள் தீர்மானம் கொண்டுவரவுள்ள செய்தி உலகத் தமிழர்களிடையே பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அறத்தின் பக்கம் நின்று நீதியைப் பெற்றுத்தர வேண்டிய நாடுகள், இனப்படுகொலை குற்றவாளிகளையே விசாரிக்கக் கோருவது எவ்வகையில் நியாயமாகும்?

தனியொரு பெண்மணியாகத் தீரத்துடன் அம்மையார் முன்னெடுத்துள்ள போராட்டத்தை எண்ணி உள்ளம் பெருமிதம் கொண்டாலும், அதேசமயம் கடந்த காலக் கசப்பான அனுபவங்கள் கற்றுத்தந்த பாடங்கள் இப்படியொரு கடினமான முடிவை அம்மையார் எடுத்திருக்க வேண்டாம் என்று எண்ணத் தோன்றுகிறது.

ஆகவே அம்பிகை அம்மையார் தம்முடைய போராட்ட வடிவத்தை மாற்றவேண்டும் என்று அன்போடு கோருகிறேன். - என்றுள்ளது. (த-இ)

## ஆசிரியர்களுக்கு ஒருநாள் பயிற்சி

யாழ்ப்பாணம் வை.எம்.சீ.ஏ. நிறுவனத்தால் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான ஒருநாள் பயிற்சிநெறி கடந்த 27ஆம் திகதி 8 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை நடை பெற்றது. இதில் மாணவர்களுக்கான கற்பித்தல் செயற்பாடுகள் மற்றும் கொவிட் 19 தொடர்பான விழிப்புணர்வு ஆகியவை தொடர்பில் கலந்துரையாடப்பட்டன. நிகழ்வின் நிறைவில் மாநகர சபை முதல்வர் வி.மணிவண்ணன் கலந்துகொண்டு சான்றிதழ்கள் வழங்கினார். (ச)


**(22) விற்பனைக்கு (22)**

யாழ் பொஸ்கோ பாடசாலைக்கு அண்மையில் 10 பரப்புக் காணியும் வீடும், யாழ் சிவப்பிரகாசம் வீதியில் 10 பரப்புக் காணியும் வீடும், யாழ் திநெல்வேலி கலாசாலை வீதியில் 10 பரப்புக் காணியும், யாழ் பரமேஸ்வராச் சந்திக்கு அண்மையில் பலாலி வீதியில் 3 பரப்புக் காணியும், யாழ் வேம்படி பாடசாலைக்கு அண்மையில் 3 பரப்புக் காணியும், யாழ் ஆஸ்பத்திரி வீதியில் ஆஸ்பத்திரிக்கு முன்பாக 4 பரப்புக் காணியும், 3 பரப்புக் காணியும், யாழ் ஆஸ்பத்திரி வீதியில் ஆஸ்பத்திரிக்கு முன்பாக 18 அடி அகலமும், 100 அடி நீளமும் கொண்ட 3 மாடி புதிய கடையும், யாழ் ஆஸ்பத்திரிக்கு வீதியில் C.T.B பஸ் தரிப்பிடத்திற்கு முன்பாக 15 அடி அகலமும், 210 அடி நீளமும் கொண்ட தனிக்கடையும் விற்பனைக்குண்டு.

**தொடர்பு: 077 723 2535**

**"கலைஞர்களுக்கு ஓர் அரியவாய்ப்பு"**

நாம் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தொடர்போன்றவற்றை எடுக்க உள்ளதால் ஆர்வம் உள்ளவர்கள் சுயவிபரத்துடன் அண்மையில் எடுக்கப்பட்ட முழுப் புகைப்படத்துடன் விண்ணப்பிக்கவும்

1. **இசை அமைப்பாளர்** (Music Director)
2. Video Editor
3. **பரதநாட்டிய கலைஞர்களும் தேவை.**
4. **கவிஞர்கள்**

கலைஞர்களின் பாத்திரமான "தந்தை, தாய், மகன், மகள் தாத்தா, பாட்டி என்பன.

வயது எல்லை கிடையாது

அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

**தொடர்புகளுக்கு:**
021 222 3460 - Telephone Number.
021 222 3480 - Fax
077 747 4111 - Whats App

**இல.32 மஞ்சவனப்பதி வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.**

**SUNJEYS MOVIES**
**சண்ஜெஸ்**



**31ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்**

தோற்றம் 03 - 05 - 1933

மறைவு 30 - 01 - 2021



எமது குடும்பத் தலைவி

**அமரர் சரஸ்வதி குமாரசாமி**

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் 27.02.2021 சனிக்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிரியைகள் 01.03.2021 திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சரவணை மேற்கு 3ம் வட்டாரம்
வேலணை
(சின்னமடுப் பாடசாலைக்கு அருகில்)

குடும்பத்தினர்



**மரண அறிவித்தல்**

அன்னை மடியில் 03 . 12 . 1921

ஆண்டவன் அடியில் 28 . 02 . 2021



**அமரர் சேதுப்பிள்ளை நாகலிங்கம்**

**(ஓய்வுபெற்ற ஆசிரியர்)**

உடுவில் கிழக்கை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சேதுப்பிள்ளை நாகலிங்கம் நேற்று (28.02.2021) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் நீர்வேலி வடக்கைச் சேர்ந்த அமரர் கணபதிப்பிள்ளை நாகலிங்கம் (ஆயுள்வேத வைத்தியர்) அவர்களின் அன்பு மனைவியும், லலிதாம்பிகை, தவகுமார், நீலாம்பிகை ஆகியோரின் அன்புத் தாயாரும், யோகராணியின் மாமியாரும், அபிஷேக்கின் அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (28.02.2021) ஞாயிற்றுக்கிழமை பி.ப 4.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.50, நூல்நிலைய வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.



# அமரர் இராசதுரை திருப்பதிவாசன்

அவர்களின்

# 31ம் நாள் நினைவஞ்சலி

**01.03.2021 திங்கட்கிழமை**

**எங்கள் குடும்பத்தின் ஆலமரம் சாய்ந்தது**

எங்கள் குடும்பத்தின் ஆலமரமென் தம்பி
வேரூன்றி நிழல் தந்த மரமெடா நீ
இன்று கொரோனா என்ற வல்லரக்கன்
உன்னை வேரோடு சாய்த்து விட்டானெடா
உன் பாசத்தால் பிரிவைத் தாங்கமுடியாது
தவியாய் தவிக்கின்றோமெடா - தம்பி
எனக்கு என் மனைவியும் மக்களுந்தான்
பொன்னுலகம் என்றாயெடா
இன்று பொன்னுலகம் விட்டு எந்த உலகம்
போனாயெடா. நீ பெற்ற செல்வங்கள்
உன் அரவணைப்புத் தேடி அலைய. உன் மனைவி
ஒரு முறையாவது என் கணவர் கதைக்க மாட்டாரா
என்று கதறி அழுகிறாளாம் இதனை எப்படி நாம்
சகித்திடுவோம் நீ ஏணியாக இருந்து
எம்மை உயரத்தில் ஏற்றி வைத்து விட்டு எம்மை
வஞ்சித்து நீ உயரப் பறந்தது என்னமாயம்
நீ நோயால் வருந்தும் போது என்னிதயம்
நொந்து வலித்ததெடா உன்னைப்
பிரிந்து எப்படி வாழப் போகின்றோம்.
உன் ஆத்ம சாந்திக்காக எங்கள்
இதயம் வணங்கிக் கொண்டே இருக்கும்
"இறை நிலையில் சாந்தி பெறுக"

**ஓம் சாந்தி ஓம்சாந்தி ஓம்சாந்தி**

**உன் அக்கா**
**திருமதி சுகுணா சீனிவாசகம்**
**இணுவில் மேற்கு, இணுவில்.**

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 31.10.1970 | 30.01.2021 |



## மரண அறிவித்தல்

தோற்றம் 08 - 11 - 1960

மறைவு 28 - 02 - 2021



# அமரர் கோமதி சிறிகுமாரன்

வேலணை வடக்கு பள்ளம்புலத்தை பிறப்பிடமாகவும் வேலணை மேற்கு சிற்பனை-முருகன் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட கோமதி சிறிகுமாரன் அவர்கள் 28.02.2021 (ஞாயிற்றுக்கிழமை) அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தனபாலசிங்கம் கமலம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான துரையப்பா - பாக்கியலட்சுமி தம்பதியினரின் அன்பு மருமகளும், சிறிகுமாரன் (இளந்தென்றல்) அவர்களின் அன்பு மனைவியும், சாரங்கா, சாருஜன், கஜானன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், துஷியந்தனின் அன்பு மாமியும் சிறி போசன், பகவத்சிங்கம், சிலம்பின்செல்வன், விக்கினேஸ்வரன் ஆகியோரின் அருமை சகோதரியும் காலஞ்சென்ற குணம்மணி மற்றும் நகுலா, வசந்தா, விஜி, நாகேஸ்வரி (கிளி) காலஞ்சென்ற சொர்ணேஸ்வரி (சொரூபம்) மற்றும் வஸ்ரேஸ்வரி (ரதி) காலஞ்சென்ற சிவகுமாரன் ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்றவர்களான சீவரட்ணம், சபாநாதன் (செவந்தி) மற்றும் கோடீஸ்வரன், கலா ஆகியோரின் சகலியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இல.228, ஆடியபாதம் வீதி, கொக்குவிலில் (சரஸ்வதி மில் அருகாமை) அமைந்துள்ள தற்காலிக இல்லத்தில் மு.ப.9.00 மணியளவில் நடை-பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பி.ப 1.00 மணிக்கு வேலணை அம்பலவி மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**தகவல்**
**குடும்பத்தினர்**
**சிறிகுமாரன் - 077 614 8667**
**தம்பி. செல்வன் - 077 604 4475**
**மருமகன் . துஷ்யந்தன் 077 846 8956**

**வேலணை**

## மரண அறிவித்தல்

பிறப்பு 14 . 12 . 1950

இறப்பு 27 . 02 . 2021



# துரைராஜா ஸ்ரீ இலங்கைராஜா

ஆனைக்கோட்டை கூழாவடியைப் பிறப்பிடமாகவும் லண்டன், கொழும்பை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட துரைராஜா ஸ்ரீ இலங்கராஜா நேற்றுமுன் தினம் (27.02.2021) சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சின்னமணி துரைராஜா அவர்களின் இளைய புதல்வனும், பாலபவானியின் அன்புக் கணவரும், வர்சனின் அருமைத் தந்தையும், ஸ்ரீ இராஜேஸ்வரி, ஸ்ரீகமலாதேவி, காலஞ் சென்ற ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோரின் சகோதரனும், சிவஞானத்தின் அன்பு மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.03.2021) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவரின் சகோதரியின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காக்கைதீவு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கூழாவடி,**
**ஆனைக்கோட்டை.**
**தொடர்பு - 077 450 2183**
**021 225 5623**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
14 . 12 . 1950

மறைவு
27 . 02 . 2021

## திரு. துரைராஜா ஸ்ரீலங்கராஜா



யாழ். ஆனைக்கோட்டை கூழாவடியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, பரிஸ், லண்டன் ஆகிய இடங்களை வசிப்பிட மாகவும் கொண்ட துரைராஜா ஸ்ரீலங்கராஜா அவர்கள் நேற்றுமுன்தினம் (27.02.2021) சனிக்கிழமை அன்று யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னார் காலமான செய்தியை அறிந்து மிகுந்த மன வருத்தம் அடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றி ருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதா பத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திகின்றோம்.

### பிரிவால் துயருற்றிருக்கும் நண்பர்கள்

சண்முகரட்ணம் சாந்திகுமார் - UK,USA
சண்முகரட்ணம் சுகுமார் - USA
சண்முகரட்ணம் சிவகுமார் - USA

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் வைத்திலிங்கம் ஜெகநாதன்



### எங்கள் வீட்டு தெய்வம்

அப்பா உயிரெழுத்து வரிசையில்
உணர்வினை வரைந்து
உள்ளத்தை கனப்படுத்திய தந்தையே
விண்முட்டும் கோபுரங்கள் ஆயிரம்
இந்த மண்மீது இருந்திடினும்
எம் கண்கண்ட தெய்வம் எம்தந்தையே
எம் முகவரிக்கு முதல் எழுத்து
எம் அகரங்களுக்கு தலை எழுத்து
நாம் முன்நின்று முகம் காட்ட
தன்னை தந்து உருவாக்கிய சிற்பியே
குடும்ப சுமைகளில் அன்னைக்கு ஊன்றுகோல்
இடுக்கண் சமயங்களில் இவரின் சொல் ஆறுதல்
மனம் நோகும் வேளையில் இவர் வாய்மொழி மயிலிறகு
குடும்ப வட்டத்திற்குள் உலகத்தையே உற்றுநோக்கிய
தத்துவஞானியே பல பேர் மணவாழ்வை முன்நின்று
நடத்திய உத்தமனே
இனிமை உங்களது குணம்
மென்மை இவர் தரும் தண்டனை
மனம் எல்லாம் மழலைகள் சிந்தனை
அன்பு இவரது மந்திரம்
பிறருக்கு கொடுப்பது இவரது நற்குணம்
இவரிடம் இருப்பதில்லை என்றும் தந்திரம்
கடமை தான் இவரது புகழிடம்
இறைவனிடம் உறவாட விருப்பம் ஏராளம்
எம் தந்தை எமைவிட்டு பிரிந்து இறைவனடி சேர்ந்தார்
எம் கண்களில் கண்ணீர் தான் இன்று ஆறாகும்
இறைவன் பாதத்தில் அமைதியுடன் இளைப்பாறுங்கள்
இறுதி மூச்சு வரை உம் நினைவுகள் நிழலாகும்
எத்தனை ஜென்மமும் உங்களுக்கு மட்டும்
பிள்ளைகளாக இருக்க இறைவா வரம் ஒன்று தரவேண்டும்
அதுபோதும் எங்களிற்கு உங்கள் அன்பிற்கும்
அமைதிக்கும் கனிவுக்கும் மரியாதைக்கும்
உங்கள் பெருமைக்கும் என்றென்றும் பிள்ளைகளாய்
நாங்கள் தலை வணங்குகின்றோம்
இறந்தவரென்பதை மறப்போம்.
எங்கள் குலதெய்வம் போல் வணங்குவோம்
ஒரு மரத்தின் கிளைகளாக நாம்
வாழ்ந்திடுவோம் அப்பா

தோற்றம்
23.11.1946


மறைவு
12.03.2020

குடும்பத்தினர்
குமரக்கோட்டம், கோண்டாவில்

# மரண அறிவித்தல்

## திரு. செல்லத்துரை விக்கினேஸ்வரன்

(முன்னாள் உரிமையாளர் ராஜா ஸ்ரோர்ஸ் நெடுங்கேணி)



காரைநகர் செம்பாடு தங்கோடையை பிறப்பிடமாகவும் வவுனியா நெடுங்கேணி மற்றும் லண்டனை தற்போதைய வதிவிட மாகவும் கொண்ட திரு. செல்லத்துரை விக்கினேஸ்வரன் அவர்கள் 27.02.2021 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை சிவபாக் கியம் தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னையா (I.K.P) அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், சரோஜா அவர்களின் அன்புக் கணவரும் மைதிலி, அனுசியா, மயூரன், பகீரதன் (U.K) ஆகியோரின் அன்பு தந்தையும், ஹேமரமணாவின் அன்பு மாமனாரும், செல்வராணி, பரமேஸ்வரன், பவளமலர் காலஞ்சென்ற நாகம்மா மற்றும் மகேஸ்வரன், சிவமலர், ஆகியோரின் பாசமிகு சகோதரரும், சிவபாலசுந்தரன், பாலேந்திரன், காலஞ் சென்ற தனலட்சுமி மற்றும் புவனேஸ்வரி, சரஸ்வதி, ராஜேஸ்வரி, ராசமலர், காலஞ்சென்றவர்களான சந்திரமலர், விஸ்வலிங்கம், சோமசுந்தரம், துரைச்சாமி மற்றும் செல்வி, ஒப்பிலாமணி ஆகியோரின் அன்பு மைத்துனரும், சிவகுரு நாதன், இந்திராதேவி தம்பதியினரின் அன்பு சம்பந்தியும், ஹர்சினியின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய தகவல்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்
0766294551 (மனைவி)
0777105018 (மருமகன்)

தோற்றம்
12.01.1961

மறைவு
27.02.2021

வைரவபுளியங்குளம்.
வவுனியா

# தீ விபத்தில் கடைகள் நாசம்

வவுனியா, மார்ச் 1

வவுனியா மகாறம்பைக்குளத்தில் உள்ள பலசரக்கு விற்பனை நிலையம் ஒன்றில் நேற்று மாலை தீ விபத்து ஏற்பட்டுள்ளது. அதில் பெறுமதிமிக்க பொருள்கள் நாசமாகியுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்று மாலை 5 மணியளவில் இந்தத் தீ விபத்து நடந்துள்ளது. கடையில் தீ பரவியதை அவதானித்த அந்தப் பகுதி இளைஞர்கள், கிராம மக்களுடன் இணைந்து தீயைக் கட்டுப்படுத்த முயன்றபோதும் அது பயனளிக்கவில்லை. கடையில் இருந்த பெரும்பாலான பொருள்கள் தீயில் எரிந்து நாசமாகியுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ-110)

# இந்தியா “கட்”

கொழும்பு, மார்ச் 1

இந்தியாவில் இருந்து இதுவரை பெற்றுக்கொண்ட 'ஒக்ஸ்போர்ட் - அஸ்ட்ரா செனகா' கொரோனாத் தடுப்பூசிகளை இனிமேல் பிரிட்டனின் பிரதான நிறுவனத்திடம் இருந்து பெற்றுக்கொள்ள அரசு தீர்மானித்துள்ளது.

மருந்து தயாரிப்பு, விநியோகம் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தியாவின் சீரம் நிறுவனத்துடன் ஆரம்பத்தில் ஒப்பந்தமொன்றை செய்துகொண்டு இலங்கைக்கு 18 மில்லியன் தடுப்பூசிகளைப் வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தபோதும், அவர்களால் 10 மில்லியன் தடுப்பூசிகளையே வழங்க முடியும் என அறிவித்திருந்தனர்.

அதனால் 'ஒக்ஸ்போர்ட் - அஸ்ட்ரா செனகா' தடுப்பூசிகளை உற்பத்தி செய்யும் பிரிட்டனில் உள்ள பிரதான நிறுவனத்திடம் கலந்துரையாடியுள்ளோம். அவர்கள் நாம் கேட்கும் தொகையை தருவோம் என்று கூறியதையடுத்து பிரிட்டனின் ஒக்ஸ்போர்ட் நிறுவனத்தில் இருந்து தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ள தீர்மானித்துள்ளோம்.

'ஒக்ஸ்போர்ட் - அஸ்ட்ரா செனகா' கொரோனாத் தடுப்பூசிகளைப் பிரிட்டனின் பிரதான நிறுவனத்திடம் இருந்து பெற்றுக்கொள்ள அமைச்சரவை அனுமதியும் கிடைத்துள்ளது - என்றார். (எ-22)

# இந்தியக் கடற்படையால் இரண்டு மீனவர்கள் மீட்பு

கொழும்பு, மார்ச் 1

படகில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறால் கடலில் தத்தளித்த இரண்டு மீனவர்களை இந்தியக் கடற்படையின் உதவியுடன், இலங்கைக் கடற்படையினர் மீட்டுள்ளனர்.

மன்னாரில் கடந்த 23 ஆம் திகதி இந்த மீனவர்கள் காணாமல் போனமை குறித்து இந்தியாவுக்கும் அறிவிக்கப்பட்டது. இதையடுத்து, மீனவர்கள் இருவரும் இந்தியக் கரையோரப் பாதுகாப்பு படையினரால், இந்திய கடற்பிராந்தியத்தில் வைத்து மீட்கப்பட்டுள்ளனர். (ற-இ)


## சமையல் உதவியாளர் தேவை

கொடிகாமம் கச்சாய் வீதியில் இயங்கி வரும் சிறிய சிற்றுண்டி கடை ஒன்றிற்கு பெண் சமையல் உதவியாளர் ஒருவர் பகுதி நேரமாக வேலைக்கு தேவை. வயதெல்லை (30-45) சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

**தொடர்புகளுக்கு: 076 417 1063**


## காணவில்லை



சில்லாலை வடக்கு, சில்லாலையைச்சேர்ந்த **கமலன் ஜெயசீலன்** என்பவரை 12.02.2021 பி.ப 5.15 முதல் காணவில்லை. அவர் பற்றிய தகவல் தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

**தொடர்புகளுக்கு: 077 355 8287**
**077 668 6615**
**(தாய்)**


## காணி விற்பனைக்கு

யாழ். கோப்பாய் நாவலர் பாடசாலைக்கு அருகில் 08 பரப்புக் காணி விற்பனைக்குண்டு (நிலப்பரப்பு) இரண்டு பரப்பாகப் பிரித்துக்கொடுக்கப்படும். (தரகர் தேவையில்லை) பருத்தித்துறை வீதியில் இருந்து 40 மீற்றர் நடை தூரத்தில் உள்ளது.

**077 805 1655, 077 596 3845**


காரைநகர்
## கிழவன்காடு கலாமன்றம்
நடாத்தும்
## ஸ்தாபக தின நிகழ்வு
(ஸ்தாபிதம் - 01.03.2002)

இடம் :- கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கு, காரைநகர்.
காலம் :- 01.03.2021 திங்கட்கிழமை பி.ப 3.30 மணி

**நிகழ்ச்சிகள்**
நாட்டியாஞ்சலி
நெறியாள்கை **ஸ்ரீமதி சத்தியப்பிரியா கஜேந்திரன்** அவர்கள்
(சிரேஷ்ட விரிவுரையாளர். நடனத்துறை. யாழ் பல்கலைக்கழகம்)
**சிறப்பு பட்டிமண்டபம்**
"கொரோனாவின் வெற்றியில் பெரிதும் வெளிப்படுவது"



**விஞ்ஞானத்தின் தோல்வியே!**
கு.பாலஷண்முகன்
அ.வாசுதேவா

**மெஞ்ஞானத்தின் தோல்வியே!**
பரா.ரதீஸ்
இ.சர்வேஸ்வரா

நடுவர்: கம்பவாரிதி இ. ஜெயராஜ்



கிழவன்காடு கலாமன்றம் வழங்கும்
"சிதம்பரஜோதி"
உயர்விருது பெறுவோர்
2021



வைத்திய நிபுணர்
நமசிவாயம் சரவணபவ

இசை ஆசிரியை
சந்திரிக்கா கணேஸ்பரன்

குறிப்பு:-
- நிகழ்வு சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக நடைபெறும்.
- நிகழ்விற்கான இலவச போக்குவரத்து சேவை கலாமன்ற யாழ் கிளையிலிருந்து பி.ப 3.00 மணிக்கு ஆரம்பமாகும்.
- சிதம்பதராஜோதி விருது பெறுபவர்களை கௌரவம் செய்ய விரும்புபவர்கள் கௌரவிக்கலாம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

கிழவன்காடு கலாமன்றம்,
காரைநகர்.

## 5 ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
18 . 12 . 1945



மறைவு
01 . 03 . 2016

**திருமதி நேசமணி கிறிஸ்ததாஸ்**

இறந்தும் இறவாமல் எம் இதயங்களில்
தெய்வச் சுடரொளியாய் வீற்றிருக்கும்
எங்கள் அன்னையே!
உங்கள் அன்பு வழி நின்று
நல்லறம் பேணி இவ்வுலகில் வாழ
உங்கள் ஆசீர்வாதம்
வேண்டி நிற்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்புடன்
திரு. K.ராஜ்குமார் குடும்பத்தினர்
(ஜேர்மனி)


## கொள்வனவு

மில் தானிய வகைகள் கொள்வனவு செய்யப்படும்

104 மாப்பியன் மில்,
சுதுமலை, மானிப்பாய்.

தொடர்புக்கு
077 772 2215



## PERSONAL CLASS

A/L மாணவர்களுக்கு பொருளியல். வணிகக்கல்வி. பௌதீகவியல் & 6 முதல் O/L வரையான மாணவர்களுக்கு அனைத்து பாடங்களும் கற்பிக்கப்படும்.

T.P: 076 750 6701


## சேவை நலன் பாராட்டு

ஆசிரியை
**செல்வி சுகேந்திரராணி குருநாதப்பிள்ளை**
(B.SC, PGDE)



சேவைக்காலம் – 28 வருடங்கள்

ஆசிரியப்பணியே அறப்பணி-
யெனக் கொண்டு அயராது
உழைத்து, அரும்பணியாற்றி
ஓய்வுபெற்றுச் செல்லும்-உம்
உயரிய சேவைதனை
உளமார வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/ இளவாலை கன்னியர்மடம் ம.வி,
இளவாலை.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




**திருமதி நருமதா பரமேஸ்வரன்**
(S.L.E.A.S II)
பிரதிக் கல்விப்பணிப்பாளர் (கல்வி நிர்வாகம்)
தீவகக் கல்வி வலயம்

எமது கல்லூரியின் புகழ் பூத்த அதிபராக ஏழு வருடங்கள்
தன்னலமற்ற சேவையாற்றி தீவகக் கல்வி வலயப்
பிரதிக் கல்விப் பணிப்பாளராகப் பதவியுயர்வு பெற்றுச் சென்ற
திருமதி நருமதா பரமேஸ்வரன் அவர்களை
உளம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

நிர்வாகத் திறமை மிக்க
நருமதா பரமேஸ்வரன்
மானிப்பாய் மகளிரின்
மகத்தான அதிபராய்
அளப்பரிய சேவையினை
அர்ப்பணிப் போடாற்றி

வீறுடனே உயர வைத்தார்.
கல்வி உலகினுக் கோர்
கலங்கரை விளக்கமாகி
நன்மையுறு உயர்பதவி
மென்மேலும் பலபெற்று
நலமுறவே வாழ்ந்திடுக.

ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி

01.03.2021

## பதினெட்டாம் ஆண்டு நினைவு தினம்



அமரர் **கார்த்திகேசு சந்திரராசா** (S.L.A.S)
முன்னாள் பிரதேச செயலர்
வலிமேற்கு, சங்கானை திட்ட
இணைப்பாளர் UNHCR

தோற்றம்
30 . 01 . 1939

மறைவு
19 . 02 . 2003

**திதி: 01.03.2021**

ஆறு மூன்று ஆண்டுகளாய்
ஆற முடியவில்லையப்பா.....
ஆறுதல் கூற யாருமில்லாமல்
ஆடி நிற்கின்றோமப்பா....
ஊர் போற்ற வாழ்ந்த - உங்கள்
உயர்ந்த குணமும் பெயரும் தான்
எம்மை இன்றும் வாழ வைக்கின்றது
எம்முடன் இன்றும் வாழும் அப்பாவின் சாந்திக்காக.......
ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி!!!

09 "இராஜஸ்தான்"
பறாளாய் வீதி, சுழிபுரம்.

குடும்பத்தினர்

## இலங்கையில்...

மாகாண சபைகளுக்கான தேர்தலை எதிர்வரும் ஜூன் மாதத்தில் நடத்துவதற்கு அரசு எதிர்பார்த்துள்ளது எனவும், இது தொடர்பான அறிவித்தலை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச விரைவில் வெளியிடவுள்ளார் எனவும் கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ள நிலையிலேயே அமைச்சர் டலஸ் அழகப்பெரும மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

வெளிநாடுகளின் அழுத்தங்களுக்கு அடிபணிந்து மாகாண சபைத் தேர்தலை அவசரப்பட்டு நடத்த முடியாது.

தற்போதைய தேர்தல் முறைமையில் பல குழப்பங்கள் உள்ளன. அதனால் புதிய தேர்தல் முறைமையில் மாகாண சபைத் தேர்தலை எதிர்காலத்தில் நடத்த வேண்டும் என்பதே அரசின் திட்டமாகும்.

மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் மாறுபட்ட பல கருத்துக்களை ஒருபுறம் அரசியல்வாதிகளும், மறுபுறம் ஊடகங்களும் வெளியிட்டுவருகின்றன. ஆனால், எந்தத் தேர்தல் தொடர்பிலும் ஜனாதிபதி தலைமையிலான அரசுதான் இறுதி முடிவெடுக்கும்.

கடந்த நல்லாட்சி அரசு போன்று மாகாண சபைத் தேர்தலை இழுத்தடிப்பது புதிய அரசின் நோக்கமல்ல. மக்களின் ஜனநாயக உரிமைக்குப் பாதகம் இல்லாமல் புதிய தேர்தல் முறைமையில் எதிர்காலத்தில் மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும் என்பதே அரசின் விருப்பம்.

இலங்கை இன்னமும் கொரோனாவின் தாக்கத்தை எதிர்கொண்டு வருகின்றது. இந்த நிலையில், நாட்டில் இப்போதைக்கு எந்தத் தேர்தலையும் நடத்தும் உத்தேசம் அரசுக்கு அறவே இல்லை. தேர்தல் விரைவில் நடக்கும் என்று பொய்யான வாக்குறுதியை வழங்கி மக்களை ஏமாற்ற அரசு விரும்பவில்லை, என்றார்.

இதேவேளை, மாகாண சபைத் தேர்தல் எதிர்வரும் ஜூன் மாதம் நடத்தப்படும் என்ற செய்தி வெறும் ஊடகச் செய்தியே. அது அரசின் செய்தி அல்ல. மாகாண சபைத் தேர்தலை ஜூனில் நடத்துவது தொடர்பில் அரசு தீர்மானம் எதையும் இதுவரைக்கும் எடுக்கவில்லை என்று அமைச்சரவைப் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான கெஹ லியரம்புக்வெல தெரிவித்தார். (ஒ5,22)

## சா/த....

கள் ஆணையாளர் சனத் பூஜித தெரிவித்துள்ளார்.

கொவிட் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள மாணவர்களுக்காக விசேடமாக பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இம்முறை க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு 6 லட்சத்து 22 ஆயிரத்து 352 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-இ)

## தொற்றுக்குள்ளான...

எழுதுவதற்கு கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியில் பரீட்சை நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

நோய்த் தடுப்பு மற்றும் நோயிலிருந்து பாதுகாப்புப் பெறும் வகையிலான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

நோய்த் தொற்று மற்றும் தனிமைப்படுத்தலில் உள்ள சகல மாணவர்களும் பரீட்சை எழுதுவதற்கு வந்துசெல்லும் வகையில் போக்குவரத்து ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறான வசதிகளுடன் கூடியதாக நாடு முழுவதும் 40 பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை இன்று ஆரம்பமாகின்றமை குறிப்பிடத்தக்கது. (து-11)

## தனியார்....

உறுதி செய்யப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் நேற்று 7 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இதனடிப்படையில், மன்னாரில் 5 பேருக்கும், வடமராட்சி கரவெட்டி மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவருக்கும், வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட ஒருவருக்குமே தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

நெல்லியடியில் உள்ள தனியார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த ஒருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர் அடிக்கடி கொழும்பு சென்று வருபவர் என்பது தெரியவந்துள்ளது என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். நவாலியைச் சேர்ந்த இவரது மனைவிக்கு நேற்றுமுன்தினம் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது.

மன்னாரில் கடந்த வாரம் சிகை அலங்கரிப்பு நிலையம் நடத்தும் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்த நிலையில், அவருடன் தொடர்புடைய நால்வருக்கு நேற்றுத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதேநேரம் மன்னார் மருத்துவமனையில் கொரோனாத் தொற்று அறிகுறிகளுடன் சேர்க்கப்பட்ட ஒருவருக்கும் நேற்றுத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கும் நேற்றுக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர் ஏற்கனவே தொற்றுக்குள்ளாகிச் சிகிச்சை பெற்று வீடு திரும்பியிருந்தார். அவருக்கு சுகவீனம் ஏற்பட்டதை அடுத்து அவர் மீண்டும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோது அவருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (எ-26)

## கொடிகாமத்தில்...

யில் விரைவில் எழுமாறான பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும் என்று குறித்த பகுதியின் சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொடிகாமத்தில் நேற்றுமுன்தினம் இனங்காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர், அறிகுறிகள் தென்பட்டதையடுத்து தாமாகவே முன்வந்து பிரிவு பொதுச் சுகாதார பரிசோதகரின் ஆலோசனையின் பிரகாரம் பரிசோதனை மேற்கொண்டு தன்னைச் சுற்றியுள்ள சமூகத்தை பாதுகாத்துள்ளார். மேலும் குறித்த தொற்றுக்குள்ளானவர் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள் தாம் நடமாடிய இடங்களின் விபரங்களை கிரமமாகப் பட்டியலிட்டு பொதுச் சுகாதார பரிசோதகரான என்னிடம் ஒப்படைத்தனர். இவர்களின் முன்னுதாரணமான செயற்பாடுகளுக்கு நன்றிகளைக் கூறிக்கொள்வதுடன், ஏனைய பொது மக்களும் இதனைப் பின்பற்ற முயல வேண்டும்.

குறித்த தொற்றாளர், கொடிகாமம் சந்தை மற்றும் அயலில் உள்ள கடைகளுக்கு அடிக்கடி சென்று வந்துள்ளார்.

இதற்கு முன்னர் அடையாளம் காணப்பட்ட வேறு சில கொரோனாத் தொற்றாளர்களும் இவ்வாறு கொடிகாமம் நகர்ப் பகுதியில் நடமாடியுள்ளனர். இதனால் கொடிகாமம் நகர்ப்பகுதி ஆபத்தான பிரதேசமாக மாறிவருவதை அவதானிக்க முடிகிறது. இதனால் குறித்த பகுதிகளில் விரைவில் எழுமாறான பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும் என்றார். (ம-159)

## துருவங்களின்...

திப்பு ஒன்று நடந்துள்ளது. இது கொழும்பு அரசியல் களத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த வாரம் இந்தச் சந்திப்பு நடந்ததை முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உறுதிப்படுத்தியுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க, இலங்கையில் மூன்று தடவைகள் பிரதமராகப் பதவி வகித்துள்ளார். அதேவேளை, பலமிக்க எதிர்க்கட்சியின் தலைவராக விளங்கிய அனுபவமிக்க இவர் இறுதியாக நடைபெற்ற பொதுத் தேர்தலில் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினர் ஆவதற்கான தகுதியையும் இழந்திருந்தார்.

எனினும், ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கிடைத்த ஒரேயொரு தேசியப்பட்டியல் ஆசனம் மூலம் ரணில் விக்கிரமசிங்க விரைவில் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்கவுள்ளார் என்று அந்தக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்திருந்தன.

அதேநேரம் எதிர்க்கட்சியை வழிநடத்த மிகவும் பொருத்தமான நபர் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எனும் கருத்தை அண்மையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ச முன்வைத்திருந்தார். கொழும்பு ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்திருந்த பிரதமர் மஹிந்த, நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய தலைவர் ரணில் விக்கிரமசிங்கவைத் தவிர வேறு யாரும் இருக்கின்றனர் என்று தாம் நினைக்கவில்லை என்று கூறியிருந்தார்.

ரணில் விக்கிரமசிங்க எதிர்க்கட்சியில் இருப்பது அரசுக்குப் பாதகமாக இருந்தாலும் அரசியல் ரீதியாக நோக்கும் போது அவரே அந்த இடத்துக்குப் பொருத்தமானவர் என்றும் அவர் வலியுறுத்தியிருந்தார்.

இந்தநிலையிலேயே, ரணில் மஹிந்த திடீர் சந்திப்பு கடந்த வாரம் இடம்பெற்றுள்ளது. இந்த சந்திப்புத் தொடர்பாகக் கூறியுள்ள ரணில் விக்கிரமசிங்க, ஏனையோர் போன்று தம்மால் நாடாளுமன்றத்தில் பிரதமரைச் சந்திக்க முடியாது என்பதால் இருவரும் சில காலமாகவே இந்தச் சந்திப்பு தொடர்பில் ஆலோசித்திருந்தோம் என்று தெரிவித்துள்ளார்.

அத்தோடு பிரதமர் நிதி அமைச்சர் பதவியை யும் வகிப்பதால் அவருடன் நாட்டின் பொருளாதாரம் தொடர்பாகவும் பேசினோம் என்றும் ரணில் கூறியுள்ளார். (எ-22)

## முதலமைச்சர்...

யக் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளர்கள் தொடர்பில் இப்போதைக்கு நான் அலட்டிக்கொள்ள விரும்பவில்லை. முதலமைச்சர் வேட்பாளர்கள் தொடர்பாக உரிய நேரத்தில் தீர்க்கமான முடிவைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுக்கும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் வேட்பாளராக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவும், கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சர் வேட்பாளராக நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனும் களமிறங்கவுள்ளனர் என்று நேற்று சில ஊடகங்களில் செய்திகள் வெளிவந்திருந்தன.

இது தொடர்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனைத் தொடர்பு கொண்டு வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் மாகாண சபைகளுக்கான தேர்தல் விரைந்து நடத்தப்பட வேண்டும் என்பது இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகளின் கோரிக்கையாகும். எமது விருப்பமும் அதுவே ஆகும்.

எனினும், மாகாண சபைத் தேர்தலைப் பழைய முறைமையில் நடத்துவதா அல்லது புதிய முறைமையில் நடத்துவதா என்பது தொடர்பில் அரசுக்குள் இரு வேறுபட்ட நிலைப்பாடுகள் உள்ளன.

அதேவேளை, மாகாண சபை முறைமையை இல்லாதொழிக்க வேண்டும் என்றும் அரசுக்குள் இருக்கும் சிலர் கங்கணம் கட்டிச் செயற்பட்டுக்கொண்டு வருகின்றனர். எது நடந்தாலும் மாகாண சபை முறைமையை இல்லாதொழிக்க நாம் ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம். இந்தியாவும் அதை விரும்பாது. மாகாண சபைகளுக்கான தேர்தலைக் காலம் தாழ்த்தாது உடனே நடத்த வேண்டும் என்று அண்மையில் இலங்கை வந்திருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் ஜனாதிபதி தலைமையிலான அரசிடம் எடுத்துரைத்திருந்தார்.

மாகாண சபைத் தேர்தலை பழைய முறைமையிலோ அல்லது புதிய முறைமையிலோ அரசு நடத்தியேயாக வேண்டும். ஆனால், மாகாண சபைகளுக்கான தேர்தல் தொடர்பில் அரசு இன்னமும் உத்தியோகபூர்வ அறிவிப்பு எதையும் விடுக்கவில்லை.

இந்தநிலையில், வடக்கு, கிழக்கு மாகாண சபைகளுக்கான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளர்கள் தொடர்பில் இப்போதைக்கு நான் அலட்டிக்கொள்ள விரும்பவில்லை. முதலமைச்சர் வேட்பாளர்கள் குறித்து உரிய நேரத்தில் தீர்க்கமான முடிவைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுக்கும் - என்றார். (எ-22)

## சர்வதேச...

பின்வீதியில் சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்புப் போராட்டம் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்கள் இந்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

இலங்கையைக் குற்றவியல் நீதிமன்றில் நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கை உட்பட 4 கோரிக்கைகளை முன்வைத்து பிரிட்டனில் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் சாகும் வரையான உணவு தவிர்ப்புப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையிலேயே பல்கலைக்கழக மாணவர்களால் இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது.

இந்தப் போராட்டத்தில் பல்கலைக்கழக மாணவர்கள், வேலன் சுவாமிகள் மற்றும் அருட்தந்தையர்கள் இருவர் என ஐந்து பேர் நேற்றுக் கலந்து கொண்டனர். (எ-26,319)

© 2000 Agfa-Gevaert N.V.

யாழ். போதனா மருத்துவமனையில்

# நோயாளரைப் பார்வையிட ஒருவரே அனுமதிக்கப்படுவர்

பதில் பணிப்பாளர் மருத்துவர் பவானந்தராஜா அறிவிப்பு

**யாழ்ப்பாணம், மார்ச் 1**

**யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில், நோயாளர்களைப் பார்வையிட வருவோரின் எண்ணிக்கை, இன்று முதலாம் திகதி தொடக்கம் ஒரு நோயாளிக்கு ஒரு பார்வையாளர் என்றவாறு குறைக்கப்பட்டுள்ளது. இதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியம் என்று மருத்துவமனையின் பதில் பணிப்பாளர் மருத்துவர் எஸ்.சிறிபவானந்தராஜா தெரிவித்தார்.**

மருத்துவமனையில், நேற்றுமுன்தினம் ஏற்பாடு செய்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

இந்த மருத்துவமனையில், மருத்துவ நிபுணர் உட்பட மூவருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டமையையடுத்து சில சிகிச்சைப் பிரிவுகள் தற்காலிகமாக சேவையைக் குறைத்துக்கொண்டன. ஏனைய நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்குவது தொடர்கின்றது.

எனினும், பார்வையாளர் எண்ணிக்கை அதிகமாகவுள்ளது. எனவேதான் பார்வையாளர்களின் எண்ணிக்கையைக் குறைத்துள்ளோம்.

அதுமட்டுமன்றி, மருத்துவமனைக்குள் நுழையும்போதும், மருத்துவமனைக்குள்ளேயும், சகலரும் முகக்கவசம் அணிந்திருத்தல் வேண்டும். மருத்துவ நிபுணர்கள், மருத்துவர்கள், தாதியர்கள், மருத்துவ நிறைவுகாண் சேவை வல்லுநர்கள், சிற்றூழியர்கள் என்றவாறு சகலருமே முகக்கவசம் அணிதல் கட்டாயம். அவ்வாறே நோயாளர்களும் நோயாளர்களைப் பார்வையிட வருவோரும் முகக்கவசம் அணிந்திருத்தல் கட்டாயம். இவ்வாறு அணிவது மட்டுமன்றி தனியாள் இடைவெளியையும் ஒவ்வொருவருமே பின்பற்றவேண்டும். அதன் மூலமாக, சமூகத்தையும் பாதுகாக்கும் பொறுப்பு ஒவ்வொருவருக்குமே உள்ளது.

கொரோனாத் தொற்றால் சிகிச்சைகள் நிறுத்தப்பட்டுள்ள சிகிச்சைப் பிரிவுகள் எதிர்வரும் 5ஆம் திகதி தொடக்கம் வழமைபோன்று இயங்கத் தொடங்கிவிடும்.



தடுப்பூசி போதனா மருத்துவமனையில் உள்ள பணியாளர்களில், இதுவரை 86 வீதமானோருக்கு முதல் தடுப்பூசி போடப்பட்டுள்ளது. இந்தத் தடுப்பூசிகள் பாதுகாப்புத்தர மூன்று தொடக்கம் நான்கு வாரங்கள் ஆகும். தவிர, 60 தொடக்கம் 70 வீதமான பாதுகாப்பையே இவை தரும். முமையான பாதுகாப்புத்தர இரண்டாம் கட்ட தடுப்பூசி போடப்படுதல் வேண்டும்.

மருத்துவமனையில், தொற்றாளர்களுடன் பழகியிருக்கலாம் என்ற சந்தேகிக்கும் ஊழியர்கள் தனிமைப்படுத்தலில் உள்ளனர்.

கொரோனாத் தொற்றுள்ள நோயாளிகள் மூலமாகவே மருத்துவ நிபுணருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்று கருதுகின்றோம். அவருக்குத் தேவையான சகிச்சைகளை வழங்கவென, அவர் கொழும்பு ஐ.டி.எச். மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். சில நாள்களில் அவர் தேறிவிடுவார்.

மருத்துவமனையில் சிகிச்சை வழங்கலில் எவ்வித குழப்பமும் இல்லை. - என்று பதில் பணிப்பாளர் சிறிபவானந்தராஜா மேலும் தெரிவித்தார். (த-319)

## பொதுமக்கள் தடுப்பூசியை பெற்றுக்கொள்வதில் சிக்கல்

அவசியமான நேரத்தில் தேவையான அளவில் தடுப்பூசிகளை கொள்வனவு செய்யத் தவறியமை காரணமாக தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்வதில் பொதுமக்கள் பல்வேறு சிக்கல்களை எதிர்கொண்டுள்ளனர் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார். நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

2021 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டம் மீதான விவாதத்தின் போதும், ஆறு மாதங்களுக்கு முன்பு இடம்பெற்ற கொரோனாத் தொற்று தொடர்பான விவாதத்தின் போதும் தடுப்பூசிகளைக் கொள்வனவு செய்யுமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கப்பட் டுள்ளது.

ஆனால் தற்போது கொள்வனவு செய்திருக்கும் கொரோனாத் தடுப்பூசிகளின் எண்ணிக்கை நாட்டின் சனத்தொகையுடன் ஒப்பிடும்போது போதுமானதாக இல்லை. - என்றார். (ற-இ)

**காணி தேவை**

மாநகர சபை, கோப்பாய், நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட இடத்தில் 20 தொடக்கம் 30 வரையான பரப்பளவு காணி தேவை. தரகர் தேவையில்லை

தொடர்புக்கு 076 221 2037

**வேலையாட்கள் தேவையா?**

உங்கள் நிறுவனத்திற்கு பொருத்தமான உத்தியோகத்தர்களை (data Entry operator, Office Staffs, Cashier, Driver,...) எமது நிறுவனத் திற்கு வந்து கணினி பதிவில் தெரிவு செய்து

**DEWMAS JOB BANK**

51, Amman Road, Nallur 074 138 3368 021 315 2500

**உடனடி வேலை வாய்ப்புக்கள்**

Accounts Clerk, Graphic Designer, sales Rep, Sales, Binding, Marketing, Cook, Helper, Bike Service, Pharmacist, Front Officers உட்பட சில உடனடி வேலைவாய்ப்புக்கள் உள்ளன.

**DEWMAS JOB BANK**

51, Amman Road, Nallur 074 138 3368 021 315 2500

## சிறுவர் துஸ்பிரயோகம் குறித்து கலந்துரையாடல்!

கிளிநொச்சி, மார்ச் 1

கிளிநொச்சி கல்வி அபிவிருத்தி அமையத்தின் ஏற்பாட்டில், மாதாந்தம் நடைபெறும் முழுநிலாக் கலந்துரையாடல் கடந்த வெள்ளிக்கிழமை கூட்டுறவுச் சாலை அருகாமையில் ஏ9 வீதியில் அமைந்துள்ள கிளிநொச்சி மாவட்டச் செயலக பயிற்சி மண்டபத்தில் இடம்பெற்றது.

கிளிநொச்சி கல்வி அபிவிருத்தி அமையத்தின் தலைவர் மருத்துவர் மு.சிறீதர் தலைமையில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

இதன்போது, அதிகரித்து வரும் தற்கொலைகள் அதற்கான காரணங்கள் மற்றும் தீர்வுகளும், சமூகத்தின் பொறுப்புக்களும், சிறுவர் துஸ்பிரயோகம் உள, உடல் ரீதியாக ஏற்ப டும் பாதிப்புக்கள், அதிலிருந்து விடுபடுவதற்கான வழிமுறைகள் மற்றும் இவற்றைக் குறைப்பதற்கான அல்லது இல்லாதொழிப்பதற்கான வழிமுறைகள் மற்றும் சமூக அமைப்புக்களின் கடமைகள் பொறுப்புக்கள் தொடர்பாகவும் விளக்கம் அளிக்கப்பட்டது. (ற-159)

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியில் ஆறுகால்மடம் மெயின் றோட்டுடன் நாற்பத்தெட்டு பரப்பு காணி (48) விற்பனைக்கு. இரண்டு பரப்பாக பிரித்து கொடுக்கப்படும். யாழ் பஸ் நிலையத்திலிருந்து 2km தூரம். தரகர் தேவையில்லை.

தொடர்புக்கு : குரு 077 288 0152 077 468 3354 076 857 7043

**பணியாளர் தேவை**

சாவகச்சேரி நகரில் இயங்கி வரும் உணவகம் ஒன்றுக்கு கீழ் வரும் பணி நிலைகளுக்குரிய பணியாளர் தேவை. தகுதியுடையோர் கீழ் உள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு நேரில் வருகை தரவும்.

கொத்து, றைஸ் தயாரிப்பவர்
சமையல் உதவியாளர்
உணவு பரிமாறுபவர் (வெயிற்றர்)
றொட்டி வேலை செய்பவர்

தொடர்புக்கு:
**077 649 1027**
**077 940 0963**

**யாழ் மாவட்ட கலட்டி பாற்சாலை, கீரிமலை**
**பண்ணையாளரின் நலன்கருதி**
**பால் விலை மாற்றம் பற்றிய அறிவித்தல்**

1 லீற்றர் கொள்விலை ரூபா 80.00
1 லீற்றர் விற்கும் விலை ரூபா 100.00

இவ்விலை மாற்றம் இன்று 01.03.2021 முதல் நடைமுறைப்படுத்தப்படும்.

கொள்முதல் செய்யும் இடங்கள்
மாவை கலட்டி, கீரிமலை
யூனியன் அருகாமை, சங்கானை.

முகாமையாளர்
மாவை கலட்டி பாற்சாலை.
077 836 4858

**அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு**



**அமரர் வடிவாம்பிகை காராளபிள்ளை**

அம்மா என அழைக்க அவனியில் வந்த வடிவே கைம்மாறேதும் கருதாமல் கருவில் சுமந்த தேவே இம்மானிலம் எமை மதிக்க ஏற்ற முறச்செய்த தாயே தைமாதப் பூரணையில் தனியாகச் சென்றதேனோ? ஆறமுடியாத துன்பமம்மா எமக்கு உம்பிரிவு தந்தையிடம் சென்றதையெண்ணிச் சாந்திபெற வந்தனை செய்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டி கிரியைகள் இன்று (01.03.2021) திங்கட்கிழமை காலை 07.00 மணியளவில் "நயினாதீவு புனித கங்காதரணித் தீர்த்தக்கரையிலும்" வீட்டுக்கிருத்திய நிகழ்வு பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு : இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

5ம் வட்டாரம்,
நயினாதீவு

குடும்பத்தினர்



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.03.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.